www.penakural.com

மலர்: 04 இதழ்: 02 டிசம்பர் 2025 Vol.: 04 Issue: 02 December 2025 ₹ 20/-

# பேனா குரல்

PENA KURAL

RNI No.:
TNTAM / 2022 / 85375

தமிழ் மாத இதழ்

# கணக்கே அரசியல்




# Subzero Cool Tech

## AC REPAIR SERVICE & RENT

**AT YOUR DOOR STEP**

- AC REPAIR
- INSTALLATION
- MAINTENANCE
- AMC SERVICE

**We Repair all Brands**




**CONTACT US**

Address:
3/885, Pillaiyar Kovil Street,
Mettukuppam, OMR,
Opp to Bajanai Kovil,
Chennai - 600097.

SARAVNAN
9884555002
Email: saravnan1290@gmail.com

பேனா குரல்

PENA KURAL தமிழ் மாத இதழ்

RNI No.: TNTAM/2022/85375

ஆண்டு: 04 இதழ்: 02 டிசம்பர் 2025

விலை: ₹ 20/- ஆண்டு சந்தா: ₹ 240/-



உரிமையாளர் & அச்சிட்டு வெளியிடுபவர் : N V சிவசங்கர்

ஆசிரியர் : ராதிகா.S, B.E.,

சிறப்பு ஆசிரியர் : M. ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர் : K. ராமசுப்ரமணியன்

இணை ஆசிரியர் : K. ரமேஷ்குமார்

துணை ஆசிரியர்கள்:
துரை. சந்துரு, ந.மதிவாணன்,
P.கார்த்திகேயன், S.மோகன்

தலைமை நிருபர்கள்:
R.ஹரிகிருஷ்ணன், M.திலிப் குமார்,
B.நவின்குமார், H.காஞ்சன், சங்கரன்

நிருபர்கள்:
Ba.சரவணன், K.கலைமணி, அன்புமணி,
தமிழ் வீரன், D.பாமா, D.ராஜேஷ்,
K.மாரிதுரை

புகைப்பட நிருபர்கள்: V.கவியரசன், கபில்

ஓவியம் & புகைப்பட நிருபர்: V.சந்தோஷ் குமார்

சட்ட ஆலோசகர்கள்:
M. குணசீலன், B.Com.,M.L., Government of India,
Central Government Additional Standing Counsel
G. சத்தியநாராயணன், B.A., L.L.B.,

இதழ் வடிவமைப்பு:
Tamilni Printz & Graphics - 8754582123



நிர்வாக அலுவலகம்:
பேனா குரல்
3/885, பிள்ளையார் கோவில் தெரு,
மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை,
தமிழ் நாடு, இந்தியா - 600097.

தொடர்புக்கு:
044-35906002, 8754582123
info@penakural.com
news@penakural.com
www.penakural.com



பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை, மற்றும் விளம்பரங்கள் இதழின் சொந்த கருத்து அல்ல. பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு உட்பட்டது. *




# கணக்கே அரசியல்!

கதமிழக அரசியல் என்றாலே அது வெறும் தேர்தல் கணிதம் அல்ல - சமூக நீதி, மொழி பாதுகாப்பு, பிராந்திய அடையாளம், அரசு நிதி மேலாண்மை, நலத்திட்டங்களின் பயன் போன்ற பல தரப்பட்ட அடுக்குகளால் ஆன மிக நுணுக்கமான தளம். இந்த மாநிலத்தின் அரசியல் கலாச்சாரத்தில், "தலைவர் கரிச்மா"க்கும் "கண்கூடும் நிர்வாக மதிப்பீடு"க்கும் சமமான முக்கியத்துவம் உள்ளது.

இன்றைய சூழலில் ஆளும் தரப்பு வளர்ச்சி, முதலீடு, நலத்திட்டம் ஆகியவற்றைத் தன் பலமாகச் சொல்லிக் கொள்கிறது. ஆனால், விலை உயர்வு, வேலை வாய்ப்பு குறைவு, நகர்ப்புற சேவைகளில் வீழ்ச்சி, மற்றும் சட்டம்-ஒழுங்கு தொடர்பான குழப்பங்கள் தொடர்ந்து மக்கள் மனநிலையை பாதிக்கின்றன. ஆளும் தரப்பு "செய்தது - செய்யப் போவது" என்கிற பட்டியலை முன்வைக்கிறது; ஆனால், மக்கள் "பயன் - பயன் அடைவு வேகம்" என்பவற்றை கேட்கிறார்கள்.

எதிர்க்கட்சிகளுக்கும் இது எளிதான தருணமல்ல. விமர்சனத்தால் மட்டும் ஓர் அலை உருவான காலம் கடந்து விட்டது. இன்று மாற்றுக்கருத்து இருந்தால் மட்டுமல்ல மாற்று யோசனை, நிர்வாக முன்னோடித்திட்டம், நிதி ஆதாரம் ஆகியவற்றையும் மக்கள் கேட்கிறார்கள். சிறப்பு சமூகங்களுக்கு இணையான பிரதிநிதித்துவம், இளைஞர்களின் எதிர்பார்ப்பு, தொழில் வளர்ச்சி ஆகிய துறைகளில் எதிர்க்கட்சிகள் நம்பிக்கை கொடுக்க வேண்டிய தருணம் இது.

மக்கள் மனநிலையிலும் பெரும் மாற்றம். ஒருகாலத்தில் "அடையாள அரசியல்" ஓர் முக்கிய விசையாக இருந்தாலும், இன்று "அன்றாட வாழ்வு" அரசியலின் மையம். தண்ணீர், சாலை, மருத்துவம், வேலை, கல்வி இவை அனைத்தும் மக்கள் முடிவை தீர்மானிக்கும் காரணிகள். சமூக ஊடகங்கள் இந்தப் போக்கை மேலும் ஆக்கபூர்வமாக்கி உள்ளன; இன்று ஒரு சாதாரண குடிமகன் கூட கொள்கைகளை ஆய்வு செய்கிறான், தரவை பகிர்கிறான், கேள்வி கேட்கிறான். இது அரசியல் தலைவர்களுக்கான புதிய சோதனை.

தமிழகம் இனி "ஒரே பாதை" அரசியலல்ல சிந்தனையின் போட்டி, நிர்வாக திறனின் போட்டி, நம்பகத்தன்மையின் போட்டி. எதிர்காலத்தில் யார் வென்றாலும், அவர்களுக்கு மக்கள் கொடுக்கும் அடிப்படை.

"நீங்கள் என்ன செய்தீர்கள், அதை எவ்வளவு தெளிவாக நிரூபிக்க முடியும்?" என்பதே.

– ஆசிரியர்

# மோடி - புதின் சந்திப்பு: இருநாட்டு உறவுக்கு புதிய உயரம்

இந்தியா–ரஷ்யா உறவை மேலும் வலுப்படுத்தும் முக்கிய தருணமாக பிரதமர் நரேந்திர மோடியும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினும் மேற்கொண்ட சமீபத்திய சந்திப்பு அமைந்தது. பல தசாப்தங்களாக நீடித்து வரும் இரு நாடுகளின் மூலோபாய நட்புறவை புதிய பரிமாணத்துக்கு கொண்டு செல்லும் வகையில் இந்த சந்திப்பு நடைபெற்றது. உலகளாவிய அரசியல் மாற்றங்கள், ஆசியப் பிராந்திய பாதுகாப்பு சூழ்நிலை, பொருளாதார வளர்ச்சி மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம் போன்ற பல விடயங்கள் குறித்து இரு தலைவர்களும் விரிவாக கருத்து பரிமாறினர்.

பாதுகாப்புத் துறையில் இருப்புப் போக்கோ, ஆயுத உற்பத்தி, கூட்டு ஆய்வு திட்டங்கள் ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதில் இருதரப்பும் ஒப்புதல் தெரிவித்தன. குறிப்பாக, இந்தியாவின் 'மேக் இன் இந்தியா' முயற்சியின் கீழ் பாதுகாப்பு உற்பத்தியில் ரஷ்யாவின் பங்கு அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. எரிசக்தித் துறையில், கச்சா எண்ணெய் இறக்குமதி, அணு ஆற்றல் திட்டங்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முயற்சிகள் ஆகியவற்றில் இரு நாடுகளும் புதிய உடன்பாடுகளுக்கு கருதுகோள் முன்வைத்தன.

வணிக மற்றும் பொருளாதார துறைகளில், இந்தியா–ரஷ்யா வர்த்தகத்தை வருங்காலத்தில் பெரிதும் உயர்த்த தீர்மானிக்கப்பட்டது. போக்குவரத்து இணைப்புகளை மேம்படுத்துவதற்காக 'வடக்கு–தெற்கு சரக்கு வழித்தடம்' (INSTC) பற்றியும் இரு தலைவர்களும் விவாதித்தனர். அதேசமயம், விண்வெளி துறையில் கூட்டு ஆய்வுகள்,



மனிதர் பங்கேற்கும் விண்வெளி முயற்சிகள் போன்றவற்றிலும் இருநாடுகளும் புதிய ஒத்துழைப்பை முன்னேற்ற முடிவு செய்தன.

இந்த உலகம் நிலைத்தன்மை சவால்களை எதிர்கொள்ளும் நேரத்தில், அமைதி, பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், பரஸ்பர மரியாதை மற்றும் பல்துறைக் கூட்டுறவை அவசியம் என மோடியும் புதினும் ஒருமித்த கருத்து தெரிவித்தனர். பல ஆண்டுகளாக நிலைத்த நண்பர்களாக திகழும் இந்தியா–ரஷ்யா உறவை மேலும் வலுப்படுத்தும் முக்கிய பரிமாற்றமாக இந்த சந்திப்பு கருதப்படுகிறது. இது இரு நாடுகளுக்கும் எதிர்காலத்தில் பல துறைகளில் வளர்ச்சி ஏற்பட வழிவகுக்கும் என நிபுணர்கள் மதிப்பிடுகின்றனர்.

# பிளான் 440:
# ஸ்டாலின் டார்கெட்டில் திமுக புதிய ரூட்




தமிழ்நாடு சட்டசபை தேர்தல் அணுகி வரும் நிலையில், ஆளும் திமுக வாக்குச்சாவடி அடிப்படையிலான புதிய தேர்தல் திட்டத்தை கையில் எடுத்துள்ளது. ‘என் வாக்குச்சாவடி – வெற்றி வாக்குச்சாவடி’ என்ற பிரச்சாரத்தின் மூலம், ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் தனித்தனி இலக்கை நிர்ணயிக்க வேண்டும் என்று முதலமைச்சரும், திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். தேர்தல் பணிகளை அடிப்படை மட்டத்திலிருந்து வலுப்படுத்தும் நோக்கில், பூத் கமிட்டிகளின் செயல்பாட்டை முழுமையாக சீரமைக்கும் முயற்சிதான் இது.

சென்னை ஆழ்வார்பேட்டை சித்தரஞ்சன் சாலையில் உள்ள தனது சொந்த 24-ஆம் எண் வாக்குச்சாவடி கூட்டத்தில் நேரடியாக பங்கேற்ற ஸ்டாலின், அங்கு 440 வாக்குகள் என்பது குறிக்கோளாக இருக்க வேண்டும் என்று அறிவித்தார். ஒவ்வொரு பூத் குழு உறுப்பினருக்கும் தனித்தனி பொறுப்புகள் ஒதுக்கப்பட்டன. இதே போல், மாநிலம் முழுவதும் உள்ள நிர்வாகிகளும் தங்களது வாக்குச்சாவடிகளுக்கான டார்கெட்டுகளை கணக்கிட்டு, திட்ட அறிக்கைகளை தலைமையகத்தில் சமர்ப்பித்துள்ளனர்.

பெண்கள் உட்பட திமுக தொண்டர்கள் பலர் வீடு வீடாகச் சென்று தேர்தல் விளக்கப் பணிகளை வலுப்படுத்தி வருகின்றனர். வாக்காளர்களின் பட்டியலை சீரமைத்தல், புதிய வாக்காளர்களை அணுகுதல், தளவாட ஏற்பாடுகளை வலுப்படுத்துதல் போன்ற பணிகள் இதில் முக்கியத்துவம் பெறுகின்றன. வரவிருக்கும் மாதங்களில் நடக்கும் தேர்தலை முன்னிட்டு, திமுக தரப்பு அடிப்படை மட்டத்தில் ஒருங்கிணைந்த செயல்பாட்டை உருவாக்கும் வகையில் இந்த முன்னெடுப்பு பார்க்கப்படுகிறது.

இந்நேரத்தில், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை குறிவைத்து ஸ்டாலின் வெளியிட்ட சமூக வலைத்தளப் பதிவும் கவனம் பெற்றுள்ளது. “எந்த ஷா வந்தாலென்ன, எத்தனை திட்டம் போட்டாலென்ன... தமிழ்நாடு என்றைக்குமே ஆணவம் பிடித்த டெல்லிக்கு Out of Control!” என்று அவர் பதிவிட்டது அரசியல் வட்டாரங்களில் பேசுபொருளாகியுள்ளது.

மொத்தத்தில், திமுகவின் ‘பிளான் 440’ மற்றும் வாக்குச்சாவடி அடிப்படையிலான தீவிரமான பிரச்சாரத் திட்டம், 2026 சட்டமன்றத் தேர்தலை குறிவைத்து உருவாக்கப்பட்ட முக்கியமான தேர்தல் யுத்தத்திட்டமாக மதிக்கப்படுகிறது.



# கபடி—இந்திய மகளிர் சாம்பியன்

## வங்கதேசத்தில் நடைபெற்று வந்த உலகக் கோப்பை மகளிர் கபடியில்இ ந்திய அணி சாம்பியன் பட்டம் வென்று அசத்தல்

மகளிர் கபடி உலகக் கோப்பை தொடரின் இறுதிப்போட்டியில் இந்திய அணி 35-28 என்ற புள்ளிகள் கணக்கில் சீன தைபேவை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்று சாதனை படைத்துள்ளது.

சர்வதேச கபடி சம்மேளனம் சார்பில் இரண்டாவது மகளிர் கபடி உலகக் கோப்பை தொடரானது வங்கதேச தலைநகர் தாக்காவில் கடந்த நவம்பர் 17ஆம் தேதி தொடங்கியது. முதல் முறையாக இந்தியா தவிர்த்து வேறு நாட்டில் உலகக் கோப்பை தொடர் நடைபெறுவதால், இதன் மீதான எதிர்பார்ப்பு இந்திய ரசிகர்கள் மத்தியில் சற்று கூடுதலாகவே இருந்தது.

மொத்தம் 11 அணிகள் பங்கேற்றிருந்த இந்த தொடரின் அரையிறுதிக்கு இந்தியா, வங்கதேசம், ஈரான் மற்றும் சீன தைபே அணிகள் முன்னேறின. அரையிறுதி ஆட்டத்தில் இந்திய மகளிர் அணி 33-21 என்ற கணக்கில் ஈரான் மகளிர் அணியையும், சீன் தைபே அணி 25-18 என்ற கணக்கில் வங்கதேசத்தையும் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறின.

இந்தியா மற்றும் சீன தைபே அணிகளுக்கு இடையிலான இறுதிப் போட்டியானது நடைபெற்றது. இப்போட்டியின் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய இந்திய மகளிர் அணி அடுத்தடுத்து புள்ளிகளை வென்று அசத்தியது. அதேசமயம் சீன தைபே அணியும் விட்டுக்கொடுக்காமல் விளையாட ஆட்டத்தின் பரபரப்பு கூடியது.

இருப்பினும் முதல் பாதி ஆட்டநேர முடிவில் இந்திய மகளிர் அணி 20 புள்ளிகளை பெற்றிருந்த நிலையில், சீன தைபே மகளிர் அணியால் 16 புள்ளிகளை மட்டுமே எடுக்க முடிந்தது. இதன் மூலம் இந்திய மகளிர் அணி 4 புள்ளிகள் வித்தியாசத்தில் முதல் பாதியில் முன்னிலை பெற்றுது.

பின்னர் நடைபெற்ற இரண்டாம் பாதி ஆட்டத்திலும் அபாரமாக செயல்பட்ட இந்திய மகளிர் அணி முன்னிலையைத் தக்கவைத்ததுடன், 15 புள்ளிகளை வென்றது. மறுபக்கம் இறுதிவரை போராடிய சீன தைபே மகளிர் அணியால் இரண்டாம் பாதியில் 12 புள்ளிகளை மட்டுமே எடுக்க முடிந்தது.

இதன் மூலம் ஆட்டநேர முடிவில் இந்திய அணி 35-28 என்ற புள்ளிகள் கணக்கில் சீன தைபே அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் நடப்பு கபடி உலகக் கோப்பை தொடரில் இந்திய மகளிர் அணி சாம்பியன் பட்டத்தையும் தட்டிச் சென்றது.

இதன் மூலம் இந்திய மகளிர் அணி தொடர்ந்து இரண்டாவது முறையாக உலகக் கோப்பையை வென்று சாதனை படைத்துள்ளது. முன்னதாக கடந்த 2012ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் மகளிர் கபடி உலகக் கோப்பை தொடரிலும் இந்திய அணி சாம்பியன் பட்டத்தை வென்று சாதனை படைத்தது குறிப்பிடத்தக்கது.



தமிழகத்தில் சொத்து தொடர்பான சேவைகளை முழுமையாக டிஜிட்டல் முறைக்கு மாற்றி வரும் நிலையில், அரசு புதியதாக 'பட்டா வரலாறு' (Patta History) சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன் மூலம், இதுவரை வில்லங்கச் சான்றிதழ் மூலம் மட்டுமே தெரிந்துகொள்ளப்பட்ட உரிமை, பரிமாற்றம், அடமானம் உள்ளிட்ட விவரங்களைப் போல, பட்டாவிற்கான முழுமையான வரலாறையும் பொதுமக்கள் ஆன்லைனில் அறிவதற்கான வசதி கிடைக்கிறது. பழைய முறையில் பட்டா பெறுதல், பட்டா மாறுதல் போன்ற பணிகள் அலுவலகங்களுக்கு சென்று நீண்டநேரம் காத்திருக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியது. புரோக்கர் தலையீடு மற்றும் அதனுடன் செலவாகும் நேர, பண இழப்பும் பொதுமக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தியது. ஆனால் தற்போது https://eservices.tn.gov.in இணையதளம் மூலம் இந்த சேவைகள் அனைத்தும் எளிதாக செயல்படுகின்றன.

# பட்டா வரலாற்றுச்சேவை அறிமுகம்

# சொத்து விவரங்கள் ஒரே ஆவணத்தில்!

புதிய 'பட்டா வரலாறு' சேவையின் மூலம் ஒரு நிலம் எந்த ஆண்டுகளில் யாரின் பெயரில் இருந்தது, எந்த ஆணையின்படி பெயர் மாற்றம் செய்யப்பட்டதோ போன்ற முழு தகவல்களையும் ஒரே ஆவணத்தில் தெரிந்துகொள்ள முடியும். அரசு இதை வில்லங்கச் சான்றிதழுக்கு இணையான வெளிப்படைத்தன்மை வழங்கும் சேவையாக விளக்கியுள்ளது. 2024 முதல் உள்ள பட்டா வரலாறுகளையே முதற்கட்டமாக பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த சேவை முதலில் ஒரு தாலுகாவில் சோதனை முயற்சியாக தொடங்கி, பின்னர் மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தப்படும். பொதுமக்கள் கட்டணம் செலுத்தி இந்த சிறப்பு பட்டா வில்லங்கச் சான்றிதழை பெற முடியும்.

சொத்து பரிவர்த்தனைகளில் மோசடி, இரட்டை விற்பனை, போலி ஆவணங்கள் போன்றவை அதிகரித்து வரும் நிலையில், இந்த சேவை மிகப் பெரிய பாதுகாப்பாக இருக்கும் என்று நிபுணர்கள் கருதுகின்றனர். நிலம் வாங்கும் முன் முழுமையான வரலாறைச் சரிபார்த்து கொள்ளும் வசதி கிடைப்பதால், மக்கள் நம்பிக்கையுடன் மற்றும் நிம்மதியாக சொத்து வாங்க முடியும். தமிழக பத்திரப்பதிவு துறையின் டிஜிட்டல் மேம்பாட்டில் 'பட்டா வரலாறு' முக்கிய முன்னேற்றமாக பார்க்கப்படுகிறது.

# நிதிச்சுமையால் தடுமாறும் தவெக!

## தூண்டில் போடும் பாஜக!



தமிழக வெற்றிக் கழகத்துக்கு (தவெக) மாநிலம் முழுவதும் போட்டியிடுவதற்கான நிதி திறன் கட்டுப்பாடுகளுக்குள்ளாக இருப்பதாக கூறினாலும் கட்சி அதிகபட்சம் 70 முதல் 80 தொகுதிகளில் மட்டுமே வேட்பாளர்களுக்கு முழுமையான நிதி ஆதரவு வழங்க முடியும் எனவும், அதற்கும் மேலாக செல்லும் போது கட்சியின் தேர்தல் இயந்திரம் பலவீனப்படும் அபாயம் இருப்பதாகவும் அவர்கள் எச்சரிக்கிறார்கள். குறிப்பாக தனிப்பட்ட நிதி ஆதாரமில்லாத வேட்பாளர்கள் கடுமையான சவால்களை எதிர்கொள்ள நேரிடும் என மதிப்பிடப்படுகிறது.


இந்த சூழலில், அதிமுக அல்லது பாஜக போன்ற வலுவான அமைப்பு, நிதி வளம், மாநிலம் தழுவிய பிரச்சாரத்தளங்கள் கொண்ட கட்சிகளுடன் கூட்டணி அமைத்தால் தவெக மீது வரும் நிதிச்சுமை கணிசமாக குறையக்கூடும் என நிபுணர்கள் கருதுகின்றனர். இப்படிப்பட்ட கூட்டணி தவெகக்கு செலவுகளை குறைத்து, தேர்தல் தளவாடங்களை சீர்படுத்தி, கட்சியின் வியூகம் மற்றும் தளர்வற்ற பிரச்சாரத்தில் கவனம் செலுத்தும் சாத்தியம் உள்ளது.

ஆனால், தவெக ஆதரவாளர்களின் பெரும்பாலானோர் கூட்டணிக்கே கடுமையாக எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். அவர்கள், கட்சியின் தனித்தன்மை, விஜயின் சுயாதீனமான அரசியல் நிலைப்பாடு மற்றும் இளம் வாக்காளர்களின் நம்பிக்கை ஆகியவை கூட்டணியால் பாதிக்கப்படலாம் என வாதிடுகிறார்கள். கூட்டணி அமைப்பது விஜயின் முடிவெடுக்கும் சுதந்திரத்தையும், தவெக உருவாக்க விரும்பும் புதிய அரசியல் வடிவத்தையும் பாதிக்கக்கூடும் என்பதில் அவர்கள் உறுதியாக உள்ளனர்.

இவை அனைத்திற்கும் நடுவில் தவெக அதிகாரப்பூர்வமாக எந்தத் தீர்மானத்தையும் அறிவிக்கவில்லை. இறுதி முடிவு விஜய் எவ்வாறு தமிழகம் முழுவதும் கட்சியை வளர்க்கப் போகிறார் என்ற நீண்டகால வியூகம் மீதே சார்ந்திருக்கும் என அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

இதனுடன், விரைவில் தமிழகத்திற்கு வரவிருக்கும் பாஜக மூத்த தலைவர் அமித் ஷா, அதிமுக உட்கட்சி பிரச்சினைகள், இடஒதுக்கீடு மற்றும் கூட்டணிக் கணக்குகள் குறித்து ஆலோசிக்க உள்ளார். அவர் விஜய் அல்லது அவரது முக்கிய பிரதிநிதிகளைச் சந்திப்பார் என்பதும், அந்தச் சந்திப்பு கூட்டணி சாத்தியம், இடப் பங்கீடு, கொள்கை ஒருமைப்பாடு போன்ற முக்கிய அம்சங்களில் தெளிவு தரக்கூடும் என்பதும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

மேலும், விஜயின் நெருங்கிய பிரதிநிதி ஒருவரும் முன்னோடியான பேச்சுவார்த்தைக்காக அமித் ஷாவை சந்திக்க வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த பேச்சுவார்த்தையின் முடிவைப் பொறுத்து, விஜய் நேரடியாக அமித் ஷாவை சந்திக்கவும் வாய்ப்பு இருப்பதாகவும் கூறப்படுகிறது. இது 2026 சட்டமன்றத் தேர்தலை நோக்கிய அரசியல் சமிக்ஞைகளில் புதிய திருப்பமாகக் பார்க்கப்படுகிறது.



# ஐஐடி ஒன்றில் கருமுட்டை உறையவைத்தல் பற்றிய உபாஸனாவின் சர்ச்சைப்பேச்சு!

## மருத்துவர்கள் கடும் கண்டனம்

ஹைதராபாத்தில் நடைபெற்ற ஐஐடி நிகழ்ச்சியில் பங்கேற்ற அபோலோ மருத்துவக் குழுமத்தின் CSR துணைத் தலைவர் மற்றும் URLife நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரான உபாஸனா, திருமணம் மற்றும் தாய்மை குறித்த தனது கருத்துகளால் பெரிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளார். மாணவர்களிடம் “நீங்கள் எத்தனை பேர் திருமணம் செய்யப் போகிறீர்கள்” என கேட்ட போது ஆண்கள் பெண்களை விட அதிகமாக கைநிறுத்தியதை அவர் “Progressive India” என்று பதிவு செய்திருந்தார்.

அதுடன் பெண்களின் மிகப்பெரிய பாதுகாப்பு முட்டையை உறையவைத்தல் என்பதால் இது திருமணமும் தாய்மையும் எப்போது வேண்டுமானாலும் முடிவு செய்ய உதவும் என அவர் கூறிய கருத்துகள் பெரும் எதிர்வினையை கிளப்பியுள்ளன. 30 வயதிற்குள் இலக்குகளை தீர்மானித்து நிதி சுயநிறைவை அடைய வேண்டும் என அவர் வலியுறுத்தியதையும் பலர் விமர்சித்துள்ளனர்.

முக்கியமாக மகப்பேறு நிபுணர் டாக்டர் ராஜேஷ் இந்த கருத்துக்கு கடுமையாக எதிர்ப்பு தெரிவித்துள்ளார். முட்டை உறையவைத்தல் என்பது சாதாரண பெண்களுக்கு எளிதில் எட்டாத செலவான மருத்துவ நடைமுறை அதாவது கோடிக்கணக்கான ரூபாய் செலவாகும் என்றும் மேலும் இதற்கு வெற்றி விகிதம் மிகவும் குறைவாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

உயிரியல் மனிதர்களின் தொழில் திட்டங்களைப் பொருட்படுத்தாது கருவுறும் திறன் 20 வயதுகளில் உச்சத்தை அடைந்து 30 வயதில் குறைந்து 35 வயதிற்குப் பின் வேகமாக வீழ்ச்சி அடையும் என்ற உண்மையை மறுக்க முடியாது என அவர் எச்சரித்தார். இதை நம்பி கர்ப்பத்தை தள்ளிப்போடுவதால் பல பெண்கள் IVF உள்ளிட்ட சிகிச்சைகளில் மனஅழுத்தத்துடனும் தோல்வியுடனும் முடிவடைகிறார்கள் என்ற வருந்தலும் அவரது பதிவில் இடம்பெற்றது.

இந்த சர்ச்சை ஐஐடிகளில் அமெரிக்க சமூக சிந்தனைகளான woke culture போன்று கருத்துகளை ஊட்ட முயற்சிக்கிறார்களா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது. ஐஐடி பாம்பே, டெல்லி, மெட்ராஸ் போன்ற பல இடங்களில் இத்தகைய பேச்சாளர்கள் அழைக்கப்படுவதால் கல்வி நிலையங்களில் தேவையற்ற சமூக அஜெண்டாக்கள் ஊட்டப்படுகின்றன என்ற குற்றச்சாட்டுகளும் எழுந்துள்ளன.

மேலும் உபாஸனா தானே முட்டையை உறையவைக்காமல் இயல்பான முறையில் தாய்மையாகி இருப்பது இந்த அறிவுரையை மேலும் முரண்பாடாக காட்டுகிறது என பலர் சுட்டிக்காட்டுகின்றனர். தொழில்நுட்பம் உதவக்கூடியதுதான் ஆனால் உயிரியல் சட்டங்களை மாற்ற முடியாது என்பதே மருத்துவ நிபுணர்கள் வலியுறுத்தும் ஒருமித்த கருத்தாகும்.

# அரசு திட்டங்களின் பெயரில் நிதி திரட்டிய பாஜக சிக்கலில் ஜேபி.நட்டா!

புதுதில்லி வந்தே மாதரம் பாடல் எழுதப்பட்டு 150 ஆண்டு கள் நிறைவடைந்தது என டிசம்பர் 8 அன்று நாடாளு மன்றத்தில் தேசப்பற்று குறித்து பாஜக விவாதம் நடத்திய மறு நாளே அரசு திட்டங்களின் பெயரில் பொதுமக்கள் பணத்தை இவர்கள் கொள்ளையடித்துள்ளது அம்பலமாகியுள்ளது.

நன்கொடை வாங்கும் திட்டம் 2021 டிசம்பர் முதல் 2022 பிப்ரவரி வரை, பாஜக கட்சி சார்பில் naren dramodi.in மற்றும் NaMo செயலிகள் மூலம் நன்கொடைகளை சேகரிக்க பெரிய நிகழ்ச்சிகளை நடத்தியது. பாஜகவின் தேசியத் தலைவர் ஜே.பி. நட்டா, மேலும் 2021 டிசம்பர் 25 வாஜ்பாய் பிறந்த தினத்தன்று 'மைக்ரோ டொனேஷன்' (micro donation) என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

கட்சி மற்றும் அதன் செயல் பாட்டை வலுப்படுத்த இந்த நன் கொடைகளை தருமாறு அழைப்பு விடுத்தார். ஒருவேளை நன்கொடை யாளர்கள் பாஜகவின் வளர்ச்சிக்கு நிதி கொடுக்க விரும்பவில்லை என்றால், 'ஸ்வச் பாரத்', 'பேட்டி பச்சாவோ பேட்டி பதாவோ', 'கிசான் சேவா' போன்ற அரசு திட்டங்களுக்கு இந்த தளங்கள் மூலம் நிதி அளிக்கலாம் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த சூழலில் பொதுமக்கள் பலரும் இந்த தளங்களின் மூலமாக அரசு திட்டங்களுக்கு போகும் என்று நம்பி அளித்த நன்கொடைகள் அனைத்தும், இறுதியில் பாஜகவின் தனிப்பட்ட கஜானாவுக்கு சென்று குவிந்துள்ளன. மேலும் நிதி அளித்தவர்களுக்கு பாஜகவின் தலைமை அலுவலகத்தில் இருந்து ரசீது வழங்கப்பட்டதன் மூலம், பணம் முழுவதுமாக பாஜகவுக்கே சென்றுள்ளது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த சதித்திட்டத்திற்கு வலுசேர்க்கும் வகையில், பிரதமர் நரேந்திர மோடியும் 2021 டிசம்பர் 25 அன்று இந்த கணக்கில் ரூ.1000 நன்கொடையாக அளித்துள்ளார்.

இவ்வாறாக, பல கோடி ரூபாய் மக்கள் பணம் பாஜகவால் ஏமாற்றி கொள்ளையடிக்கப் பட்டுள்ளது. ஆர்டிஇ மூலம் வெளிவந்த உண்மை தமிழ்நாட்டைச் சேர்ந்த பத்திரிக்கையாளர் பி.ஆர்.அரவிந்தாக்ஷன் என்பவர் தகவல் அறியும் உரி மைச் சட்டம் (RTI) மூலம் எழுப்பிய கேள்விகள் மூலம் இந்த மோசடி அம்பலமாகியுள்ளது. சுதந்திரப் போராட்டத்தில் நாட்டை



காட்டிக் கொடுத்ததைப் போலவே இன்றும் பாஜக - ஆர்எஸ்எஸ் கும்பல், பொதுமக்களை ஏமாற்றி அவர்களின் பணத்தைக் கொள்ளையடித்துள் ளது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலமாக நிரூபணம் ஆகியுள்ளது.

அரசின் நலத்திட்டங்களுக்காக தனிப்பட்ட முறையில் நிதி திரட்ட, ஒன்றிய அமைச்சகமோ அல்லது பிரதமர் அலுவலகத்திடமிருந்தோ பாஜக எந்த ஒரு சிறப்பு அனுமதியோ அல்லது அங்கீகாரத்தையோ பெறவில்லை என்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் தெளிவாகத் தெரிய வந்துள்ளது.

மேலும், ஜல் சக்தி அமைச்சகம் (நீர்வளம், நதி நீர் மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்பு அமைச்சகம், குடிநீர் மற்றும் துப்புரவுத்துறை அமைச்சகம் ஆகியவற்றை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்டது) , மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ஆகியவை, இந்தத் திட்டங்களுக்காக தனிநபர்கள் அல்லது செயலிகள் மூலம் நிதி திரட்டுவதற்கு எந்த விதியும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளன.

NaMo செயலிக்கும் பிரதமருக்கோ அல்லது அரசின் திட்டங்களுக்கோ எந்தத் தொடர்பும் இல்லை என பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது என்பதும் உறுதியாகியுள்ளது. தற்போது அரசு திட்டங்களின் பெயரில் சட்டவிரோதமாக கட்சிக்குப் பணம் வசூலித்தது குறித்து பாஜக தேசிய தலைவர் ஜே.பி. நட்டா பதிலளிக்க வேண்டும் என்று அரசியல் வல்லுநர்களும், எதிர்க்கட்சிகளும், பொதுநலவாதிகளும்கேள்விகள் எழுப்பி உள்ளது குறிப்பிடத்தக்கது ஏனெனில் இனி வரும் காலங்களில் பாஜகவுக்கு இது மிகப்பெரும் கேள்விக்குறியாக அமையும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை



# தொழிலாளர்களின் ரத்தத்தை உறிஞ்சும் புதிய சட்டம்! ஒன்றிய அரசுக்கு கடும் கண்டனம்!

ஒன்றிய அரசு விரைவில் அமல்படுத்த உள்ள புதிய தொழிலாளர் சட்டங்கள் நாடு முழுவதும் கடும் எதிர்ப்பை உருவாக்கியுள்ளன. மேலும் தொழிலாளர்களின் அடிப்படை பாதுகாப்புகள் பலவற்றை குறைக்கும் விதமாக இந்த சட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளதாக தொழிற்சங்கங்கள், தொழிலாளர் அமைப்புகள், எதிர்க்கட்சி தலைவர்கள் ஒருமித்துக் கூறுகின்றனர். குறிப்பாக, பணிநேரத்தை 12 மணிநேரமாக உயர்த்தும் பிரிவு தொழிலாளர் சமூகத்தில் மிகுந்த அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இது தொழிலாளர்களின் உடல் நலனை ஆபத்துக்கு உள்ளாக்குவதோடு கூடுதல் வேலை நேரத்திற்கு உரிய கூடுதல் தொகை வழங்கப்படாமல் சுரண்டல் அதிகரிக்கும் என்ற அச்சத்தையும் ஏற்படுத்துகிறது.

மேலும், தொழிலாளர்களின் வேலை பாதுகாப்பையும், யூனியன் அமைக்கும் உரிமையையும் குறைக்கும் வகையில் புதிய சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்பதை விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். பணிநீக்கம், தொழிற்சாலை மூடல் போன்ற செயல்களை மிகவும் எளிதாக்கும் வகையில் சட்ட திட்டங்கள் உள்ளதாகவும், இதன் மூலம் நிறுவனங்களின் நலன்கள் மட்டுமே பாதுகாக்கப்பட்டுள்ளன என்றும் குற்றஞ் சாட்டப்படுகிறது. சமூகப் பாதுகாப்பு நலன்களில் குறைப்பு, ஓய்வூதிய பாதுகாப்பில் தெளிவற்ற நிலை போன்றவை தொழிலாளர் குடும்பங்களுக்கு நேரடியான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று எச்சரிக்கப்படுகிறது.

ஒன்றிய அரசின் இந்த சட்டங்கள் இந்தியாவை "உலகளாவிய முதலீட்டின் மையமாக மாற்றும்" என விளம்பரப்படுத்தினாலும், இவை சுத்தமாக நிறுவனங்களுக்கு மட்டும் சாதகமானது, மக்களின் வாழ்வாதாரத்தை பலவீனப்படுத்தும் என்று வலியுறுத்துகிறார்கள். தொழிலாளர் அமைப்புகள் பல இடங்களில் போராட்ட அறிவிப்புகளை வெளியிட்டு, "தொழிலாளர்களின் ரத்தத்தை உறிஞ்சும் சட்டம்" என கண்டனம் தெரிவித்து வருகின்றன.

மேலும் நாட்டின் பொருளாதாரம் முன்னேற தொழிலாளர்களின் பங்கு முக்கியமானது என்ற போதிலும், அவர்களின் உரிமைகள் சுறுக்கப்படுவதால் தொழிலாளர்-நிறுவன உறவு மேலும் பதட்டமடையும் அபாயம் இருப்பதாக நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். தொழிலாளர்களின் உண்மையான நலனைக் கருத்தில் கொண்டு சட்டங்களில் திருத்தம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை நாட்டின் பல கோடி தொழிலாளர்களிடமிருந்து எழுந்து கொண்டே உள்ளது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது



# திரையில் இலவசங்களுக்கு எதிர்ப்பு! நிஜத்தில் இலவச அறிவிப்பு விஜய்யின் இரட்டை வேடம்?

ஜனநாயகத்தில் தேர்தல் என்றால் அரசியல் கட்சிகள் தங்களது கொள்கைகளையும், திட்டங்களையும் மக்களிடம் பரப்புரை செய்து வாக்கு சேகரிக்கும் காலம் மாறி இப்போது இலவசங்களை மையப்படுத்தி தேர்தலைச் சந்திப்பதிலேயே முனைப்புக் காட்டுகின்றன. தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கு இன்னும் ஐந்தாறு மாதங்களே இருக்கும் நிலையில் களம் இப்போதே இலவச அறிவிப்புகளால் சூடுபிடிக்கத் தொடங்கி இருக்கிறது.

இந்நிலையில் காஞ்சிபுரம் மாவட்ட மக்களை உள்ளரங்கு ஒன்றில் அண்மையில் சந்தித்த தமிழக வெற்றிக் கழகத் தலைவர் நடிகர் விஜய் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தமது கட்சி வெற்றி பெற்றால் அனைவருக்கும் நிரந்தர வீடு, வீட்டுக்கு ஒரு இருசக்கர வாகனம், பட்டப்படிப்பு, குடும்பத்துக்கான நிரந்தர வருமானத்துக்கு வேலைவாய்ப்பு என்பதோடு மேலும் பல அறிவிப்புகளை அங்கு கூடியிருந்தவர்களின் மிகுந்த ஆரவாரத்துக்கிடையே அறிவித்துள்ளார்.

இதில் குறிப்பிடும் படியான விஷயம் என்னவெனில் இத்தகைய இலவசங்களைத் தனது முந்தைய திரைப்படங்களில் விமர்சித்தவர், இப்போது புதிதாக ஏற்றுக்கொண்டிருக்கும் அரசியல் வேஷத்துக்காக புதுவசனம் பேசத் தொடங்கியிருப்பதில் வியப்பில்லை. ஏனெனில் அரசியல்வாதிகள் நடிக்கும்போது, நடிகர்கள் அரசியல் வேஷமேற்கக் கூடாதா என்ன?

ஆனால் தமிழ்நாட்டில் 1950-களில் அறிமுகப்படுத்தப்பட்ட இலவச கல்வி, மதிய உணவு போன்றவற்றிலிருந்து இந்த வரலாறு தொடர்வதாகக் கொள்ளலாம். ஆனால், அவை வாக்கு வங்கியை உள்நோக்கமாகக் கொண்டவை அல்ல. அன்றைய தலைவர்கள் தொலைநோக்குப் பார்வையுடன் நாட்டின் வளர்ச்சிக்கான பெரிய திட்டங்களை செயல்படுத்தினர். உபரியாக சிறுசிறு இலவசங்களையும் இணைத்துக் கொண்டனர். அவை அத்தியாவசிய தேவையைக் கருத்தில் கொண்டவை என்பதை மறந்துவிடக் கூடாது.

ஆனால், இன்றைய இலவச அறிவிப்புகள் எல்லாம் வாக்கு வங்கியை உள்நோக்கமாகக் கொண்டவையே என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. தொலைநோக்கு திட்டங்கள்



**“தமிழக வெற்றிக் கழகம் வெற்றி பெற்றால் அனைவருக்கும் நிரந்தர வீடு, வீட்டுக்கு ஒரு இருசக்கர வாகனம், பட்டப்படிப்பு, குடும்பத்துக்கான நிரந்தர வருமானத்துக்கு வேலைவாய்ப்பு என்பதோடு மேலும் பல அறிவிப்புகளை அங்கு கூடியிருந்தவர்களின் மிகுந்த ஆரவாரத்துக்கிடையே அறிவித்துள்ளார்.”**

எல்லாம் இரண்டாம்பட்சமாகவே இருக்கின்றன. எந்தவித திட்டமிடலோ, பொருளாதார அடிப்படையோ இல்லாமல் ‘மக்கள் நல்வாழ்வு’ என்கிற பெயரில் வாக்குகளுக்கு வீசப்படும் வலைகளாகத்தான் இவற்றை நாம் பார்க்க முடிகிறது.

1967 தேர்தலில் அறிஞர் அண்ணா ‘ரூபாய்க்கு 3 படி (அரிசி) லட்சியம் ஒரு படி நிச்சயம்’ என்று அறிவித்து கண்ட வெற்றியே இதற்கெல்லாம் முன்னோடி என்று கொள்ளலாம். அதைத் தொடர்ந்து 1971-இல் முதல்வரான கருணாநிதியின் ஆட்சிக்காலத்தில் இலவசங்கள் வரிசைகட்டத் தொடங்கின. அதன் பிறகு திமுகவும், அதிமுகவும் தேர்தல் வெற்றிக்காக இலவச வண்ண தொலைக்காட்சிப் பெட்டி, மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி, இலவச சைக்கிள், மடிக் கணினி, தாலிக்கு தங்கம் என ஒன்றையொன்று விஞ்சும் வகையில் இலவசங்களை வாரி வழங்கின. தொடர்ந்து கடந்த 2021 தேர்தல் பிரசாரத்தின்போது, மகளிருக்கு மாதம் ரூ. 1,000, இலவசப் பேருந்து பயணம் உள்ளிட்ட சலுகைகளை திமுக அறிவித்து வெற்றி பெற்றது. அந்த ‘திராவிட மாடல்’ இலவசங்களை கர்நாடகம், தெலங்கானா, மகாராஷ்டிரம், ஹரியாணா, தில்லி, பிகார் சட்டப்பேரவைத் தேர்தல்கள் வெற்றி ‘இலவச மாடலாக’ அங்கீகரித்து நிலை நிறுத்தி இருக்கின்றன.

இந்நிலையில் எஸ். சுப்பிரமணியம்-எதிர்-தமிழக அரசு தொடர்பான வழக்கு (2013) ஒன்றில், இலவச அறிவிப்புகள் தேர்தல் நடைமுறைகளைச் சீர்குலைப்பதாக இருக்கக் கூடாது என்றும், மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின்படி போட்டியாளர்களுக்கு வழங்க வேண்டிய சம வாய்ப்பை இலவச கலாசாரம் பாதிக்கும் என்றும் உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. நீதிமன்றம் ஆலோசனைதான் வழங்க முடியும். சட்டம் இயற்றவா முடியும்?

தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகு வாக்காளர்களுக்கு இலவசமாக பொருள்களையோ, பணத்தையோ கொடுப்பதைத்தான் தேர்தல் ஆணையம் தடுக்கிறது. இலவசங்களைத் தடுப்பது குறித்து பொதுவெளியில் அவ்வப்போது விவாதங்கள் எழுந்தாலும்கூட அதற்கான ஆக்கபூர்வ நடவடிக்கைகள் இதுவரையில் இல்லை. கடந்த 1974 முதல் 2010 வரையில் தேர்தல் சீர்திருத்த விதிமுறைகளை பரிந்துரைக்க அமைக்கப்பட்ட 6 குழுக்களில் எதுவும் இலவச அறிவிப்புகளை தடுப்பது குறித்து பரிந்துரைக்கவில்லை.

மேலும் சட்ட ஆணையம் கடந்த 2015 மார்ச்சில் சமர்ப்பித்த 255-ஆவது அறிக்கையில் தேர்தல் நடைமுறையில் தற்காலத்துக்கு ஏற்ப மேற்கொள்ள வேண்டிய பல்வேறு சீர்திருத்தங்களை விரிவாகப் பேசுகிறது ஆனால், இலவச கலாசாரத்தை ஒழிப்பதற்கான பரிந்துரைகள் எதுவும் கூறப்படவில்லை என்பது வருத்தம் அளிப்பதாக உள்ளது.

இலவச கலாசாரம் மாநிலத்தின் பொருளாதாரத்தை பெரிதும் பாதிக்கிறது என நிபுணர்கள் அடிக்கடி சுட்டிக் காட்டுகின்றனர். தமிழ்நாட்டின் மொத்த கடன் நிகழ் நிதியாண்டின் இறுதியில் சுமார் ரூ. 9.30 லட்சம் கோடியை எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே எல்லையற்ற இலவசங்கள் மாநிலத்தின் நிதிநிலையைப் பாதிக்கும்போது கல்வி, சுகாதாரம், உள்கட்டமைப்புகள், வளர்ச்சித் திட்டங்கள், நீண்ட கால முதலீடு போன்றவற்றுக்கு நிதிப் பற்றாக்குறை ஏற்படும் என்பது ஆளுங்கட்சியும், ஆண்ட கட்சியும் அறியாதது அல்ல. ஆளத் துடிக்கும் கட்சிகளும் அறிந்து கொள்ள வேண்டும்.

எனவே போட்டி போட்டுக் கொண்டு இலவசங்களை அறிவிப்பது பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் என்பதை அரசியல் கட்சிகள் உணர்ந்து செயல்பட வேண்டும். தேர்தலில் வெற்றி பெற்று ஐந்து ஆண்டுகள் ஆட்சியில் அமர்ந்தால் போதும் என்று நினைக்கும் அரசியல்வாதிகள், வருங்காலம் குறித்து ஏன் சிந்திக்கப் போகிறார்கள்? வாக்காளர்கள் இதுகுறித்து சிந்திக்காமல் இருப்பதுவரையில் இலவசங்கள் தொடரும் என்பது மட்டுமல்ல, தேர்தலுக்குத் தேர்தல் அதிகரிக்கும். கூடவே மாநிலத்தின் கடன் சுமையும் தான்.

# தமிழ்நாட்டில் ஜியோ ஹாட்ஸ்டார் ரூ.4000 கோடி முதலீடு

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தகவல்



ஜியோ ஹாட்ஸ்டார் நிறுவனம் தமிழ்நாட்டில் ரூ.4000 கோடி முதலீடு செய்யவுள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி இருப்பதாக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ஜியோ ஹாட்ஸ்டார் நிறுவனம் சார்பில் தென்னகத்துக்கான புதிய திரைப்படங்கள், இணையத் தொடர்கள் அறிமுக விழா நடைபெற்றது. இதில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளில் ஜியோ ஹாட்ஸ்டார் நிறுவனம் தயாரிக்கும் 40 திரைப்படங்கள் மற்றும் இணைய தொடர்கள் அறிமுகம் செய்யப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், செய்தி தொடர்பு துறை அமைச்சர் சாமிநாதன், மக்கள் நீதி மய்யம் தலைவரும், எம்பியும் நடிகருமான கமல்ஹாசன், நடிகர்கள் மோகன்லால், நாகார்ஜுனா, விஜய் சேதுபதி, நிவின் பாலி உள்ளிட்ட ஏராளமான தென்னிந்திய பிரபலங்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், “தென் மாநில திரைத்துறைக்கு சென்னை ஒரு தலைநகராக உள்ளது. தமிழ் மட்டுமல்லாது தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னட திரைப்படங்களும் சென்னையில் தயாரிக்கப்பட்டன. தமிழ்நாட்டின் கலை மற்றும் இலக்கிய வரலாறு ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பாரம்பரியம் கொண்டவை. அதனால் தான் தற்போது நமது கலாசாரம் உயிர்ப்புடன் உள்ளது.

நாம் அனைவரும் அறிந்தபடி, தமிழ்நாடு மற்றும் தென் மாநிலங்களின் சமூக அரசியல் நிலப்பரப்பை வடிவமைப்பதில் கலை மிகவும் சக்தி வாய்ந்த பங்கைக் கொண்டுள்ளது. கலை விடுதலை அளிக்கும், சினிமா கல்வி கற்பிக்கும், பொழுதுபோக்கு நமது சமூகத்தை முன்னோக்கி வழி நடத்தும் என்பதை நாட்டிலேயே முதன்முதலில் காட்டிய இயக்கம் திராவிட இயக்கம்.

திரைகளை வகுப்பறைகளாக மாற்றினோம், நாடகத்தை உரையாடலாக மாற்றினோம், கதைகளை சமூகமாக மாற்றினோம். எங்கள் தலைவர்களான அண்ணா மற்றும் கருணாநிதி தமிழ் திரையுலகின் உண்மையான போக்கை உருவாக்கியவர்கள். கருணாநிதி பராசக்தி திரைப்படம் மூலம் தமிழ் சினிமாவின் பாதையை முற்றிலுமாக மாற்றியவர்.

இன்றைக்கு, ஒடிடி சினிமாவை ஒவ்வொரு வீட்டிற்கும் கொண்டு சென்று சேர்த்துள்ளது. கடந்த




காலங்களில் அதற்கான வாய்ப்புகள் குறைவாக இருந்தன. கதைக்கரு தான் இப்போது முக்கியம். கதைக்கரு நன்றாக இருந்தால், அது மக்களால் என்றைக்குமே கொண்டாடப்படும். மொழி, இனம் தாண்டி கதைக்கரு நன்றாக இருந்தால், அனைத்து இடத்திலும் அதற்கான வரவேற்பு நிச்சயம் கிடைக்கும். அதற்கு நிறைய உதாரணங்களை சொல்லலாம்.

இன்றைய சூழலில், புதிய தொழில்நுட்பங்களை கலைஞர்கள் கற்றுக் கொள்வது மிகவும் அவசியம். என்ன கற்றுக் கொள்ள வேண்டும், எப்படி கற்றுக் கொள்ள வேண்டும், அதை எப்படி கலையாக கொண்டு வரவேண்டும் என்பதற்கு இங்கே எங்களோடு அமர்ந்திருக்கக்கூடிய நடிகர் கமல்ஹாசன் நம் அனைவருக்கும் ஒரு மிகச் சிறந்த உதாரணம், ஒரு முன்னோடி.

ஓடிடி சினிமாவை மாற்றவில்லை. இது சினிமாவின் பிரபஞ்சத்தை விரிவுபடுத்தியுள்ளது. இது புதிய வகையான கதைகள், வடிவங்கள் மற்றும் குரல்களுக்கான இடத்தை உருவாக்குகிறது.

ஜியோ ஹாட்ஸ்டார் நான்கு தென் மாநிலங்களில் ரூ.12,000 கோடி முதலீட்டை அறிவித்துள்ளது. இதில் தமிழ்நாட்டிற்கு ரூ.4,000 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக தமிழ்நாடு அரசுடன், ஜியோ ஹாட்ஸ்டார் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இதன் மூலம் 1000 நேரடி வேலைவாய்ப்புகளும், 15,000 மறைமுக வேலைவாய்ப்புகளும் உருவாகும்" என்றார்.


## Advertisement Tariff

| | | |
|---|---|---|
| Full Page Color Back Wrapper | : | ₹ 15,000/- |
| Full Page Color Inner Wrapper | : | ₹ 12,000/- |
| Half Page Color Wrapper | : | ₹ 8,000/- |
| Full Page Black & White | : | ₹ 8,000/- |
| Half Page Black & White | : | ₹ 5,000/- |
| **Annual Subscription** | : | **₹ 240/-** |

Administrative Office:

**PENA KURAL**
**3/885, Pillaiyar Kovil Street, (Opp to Perumal Temple) Mettukuppam,**
**OMR, Chennai, Tamil Nadu, India - 600097.**
**Ph: 044-35906002, 87545 82123**
**Email: info@penakural.com, Web: www.penakural.com**

# 100 நாள் டு 125 நாள்... மகாத்மா காந்தி ஊரக வேலை

## உறுதி திட்டத்தின் பெயர் மாற்றம்



ஊரக வேலை உறுதிச் சட்டம் 2005-ல் இயற்றப்பட்டது. அப்போதைய அரசாங்கம் இச்சட்டத்திற்கு 2009 அக்டோபர் 2 முதல் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் எனப் பெயர் மாற்றியது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை மறுசீரமைத்து, தகுதியுள்ள கிராமப்புற குடும்பங்களுக்கான வரையறுக்கப்பட்ட வேலை நாட்களை 100-லிருந்து 125 நாட்களாக உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்டத்தை விரிவுபடுத்துவது மற்றும் சட்டத்தின் பெயரையே "பூஜ்ய பாபு ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டம்" என மாற்றுவது தொடர்பான முன்மொழிவை மத்திய அமைச்சரவை விவாதித்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்தச் சட்டம் 100 நாட்களுக்கு வேலைக்கு உத்தரவாதம் அளித்தாலும், 2024-25 நிதியாண்டில் ஒரு குடும்பத்திற்கு வழங்கப்பட்ட சராசரி வேலை நாட்கள் சுமார் 50 நாட்களாகவே இருந்தது. உண்மையில், கடந்த ஆண்டு 100 நாட்களை நிறைவு செய்த குடும்பங்களின் எண்ணிக்கை 40.70 லட்சம் ஆகும். தற்போதைய நிதியாண்டில் (2025-26), வெறும் 6.74 லட்சம் குடும்பங்களே 100 நாள் உச்ச வரம்பை எட்டியுள்ளன.

இதனிடையே 125 நாட்கள் வேலை என்ற முன்மொழிவு, 2026 ஏப்ரல் 1 முதல் நடைமுறைக்கு வரவுள்ள 16-வது நிதி ஆணையத்தின் பரிந்துரைகளில் இந்தத் திட்டம் தொடர்வதற்கான ஒப்புதல் நடைமுறையை அரசு ஏற்கனவே தொடங்கியுள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை திட்டத்தை நிர்வகிக்கும் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் 2022-ம் ஆண்டு அமைக்கப்பட்ட ஒரு குழு, மாநிலங்களின் செயல்பாடு மற்றும் திட்ட நிர்வாகம் தொடர்பான பிரச்சினைகளை பற்றி ஆய்வு செய்து, அக்குழு கடந்த ஆண்டு தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. ஊரக வேலை உறுதிச் சட்டம் 2005-ல் இயற்றப்பட்டது. அப்போதைய அரசாங்கம் இச்சட்டத்திற்கு 2009 அக்டோபர் 2 முதல் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் எனப் பெயர் மாற்றியது.

தற்போது, சட்டத்தின் பெயரை மாற்றுவதற்கும், உறுதியளிக்கப்பட்ட வேலை நாட்களை 100-லிருந்து 125 ஆக உயர்த்துவதற்கும் என்.டி.ஏ அரசு சட்டத் திருத்தம் செய்ய வேண்டியிருக்கும் என்று தகவல் வெளியாகியுள்ளது. கடந்த காலத்தில், ஆந்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர் மற்றும் ராஜஸ்தான் உள்ளிட்ட பல மாநிலங்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை திட்டத்தின் தொழிலாளர்களுக்காக 100 நாள் வேலை உச்ச வரம்பை உயர்த்த வேண்டும் என்று கோரி வந்துள்ளன. மாநிலங்கள் 100 நாட்களுக்கு மேல் வேலை வழங்க முடியும் என்றாலும், அதற்கான நிதியைத் தாங்களே திரட்ட வேண்டும், ஆனால் இதனை மிகக் குறைந்த மாநிலங்களே செய்கின்றன.

கடந்த நிதியாண்டில் (2024-25) உருவாக்கப்பட்ட 290 கோடி நபர்கள் வேலை நாட்களில், மாநிலங்கள் தங்கள் சொந்த வரவு செலவுத் திட்டத்தைப் பயன்படுத்தி உருவாக்கியது வெறும் 4.35 கோடி நபர்கள் வேலை நாட்கள் மட்டுமே. தங்கள் சொந்த வளங்களைப் பயன்படுத்தி வேலைகளை உருவாக்கும் மாநிலங்களில் மகாராஷ்டிரா, சத்தீஸ்கர், ஒடிசா, இமாச்சலப் பிரதேசம், கேரளா, ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் மற்றும் தெலங்கானா ஆகியவை அடங்கும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை திட்டம் சட்டத்தின்படி, திறமையற்ற உடல் உழைப்பு வேலை செய்ய முன்வரும் கிராமப்புறக் குடும்பத்தின், உறுப்பினர்கள் ஒவ்வொரு நிதியாண்டிலும் குறைந்தபட்சம் 100 நாட்கள் ஊதிய வேலை பெறத் தகுதியுடையவர்கள். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை சட்டத்தின் பிரிவு 3 (1) ஒரு கிராமப்புறக் குடும்பத்திற்கு ஒரு நிதியாண்டில் "குறைந்தபட்சம் 100 நாட்களுக்குக் குறையாத" வேலைக்கு வழிவகை செய்கிறது.

வனப்பகுதிகளில் வசிக்கும் ஒவ்வொரு பழங்குடியினர் குடும்பத்திற்கும், வன உரிமைச் சட்டம், 2016-ன் கீழ் வழங்கப்பட்ட நில உரிமைகளைத் தவிர வேறு எந்தச் சொந்தச் சொத்தும் இல்லை என்றால், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை திட்டத்தின் கீழ் 150 நாட்கள் வேலை கிடைக்க உரிமை உண்டு. மேலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை திட்டம் பிரிவு 3(4)-ன் கீழ், வறட்சி அல்லது வேறு ஏதேனும் இயற்கைப் பேரிடர் (உள்துறை அமைச்சகத்தின்படி) அறிவிக்கப்பட்ட கிராமப்புறப் பகுதிகளில், 100 நாட்களுக்கு மேலாக கூடுதலாக 50 நாட்களுக்கு வேலை வழங்கவும் அரசு அனுமதிக்கிறது.

2005-இல் தொடங்கப்பட்டதிலிருந்து, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை திட்டத்தின் மூலம் 4,872.16 கோடி நபர்கள் வேலை நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் ₹11,74,692.69 கோடி செலவிடப்பட்டுள்ளது. 2020-21-இல், கோவிட் காலத்தில் 7.55 கோடி கிராமப்புறக் குடும்பங்கள் இத்திட்டத்தைப் பயன்படுத்தியபோது, வேலைக்கான தேவை அதிகரித்தது. கோவிட்-19 பொது ஊரங்கின்பொது சொந்த கிராமங்களுக்குத் திரும்பிய புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு இது ஒரு பாதுகாப்புக் கவசமாக மாறியது.

கடந்த நான்கு ஆண்டுகளில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை திட்டத்தின் கீழ் வேலை செய்யும் குடும்பங்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்துள்ளது. 2021-22-இல் 7.25 கோடியிலிருந்து, 2024-25-இல் 5.79 கோடியாகக் குறைந்துள்ளது. தற்போதைய நிதியாண்டில் (2025-26), டிசம்பர் 12, 2025 வரை 4.71 கோடி குடும்பங்கள் (6.25 கோடி தனிநபர்கள்) இத்திட்டத்தைப் பயன்படுத்தியுள்ளனர். ஊரக வளர்ச்சி அமைச்சகம் இந்தத் திட்டம் தொடர, 2029-30 வரை ஐந்து ஆண்டுகளுக்கு ₹ 5.23 லட்சம் கோடி ஒதுக்கீடு கோரி, செலவின நிதிக்குழுவிற்கு ஒப்புதலுக்காக ஒரு முன்மொழிவை அனுப்பியுள்ளது.

மகாத்மா காந்தியின் பெயரைச் சேர்ப்பது, ஒடுக்கப்பட்ட மற்றும் சமூக-பொருளாதார ரீதியாக விளிம்புநிலைச் சமூகங்களுக்கான சட்டத்தின் சமபங்கு மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய தன்மையை வலுப்படுத்தும் என்று அரசாங்கம் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# SIR பணியில் பாதி கிணறுதான் தாண்டியுள்ளோம்!

## திமுக மா.செ.க்களுக்கு ஸ்டாலின் அறிவுரை



வாக்காளர் சரிபார்ப்பு பணிகள் நிறைவடைந்து வாக்காளர்களின் பெயர்கள் விடுபடாமல் பட்டியலில் வந்தால்தான் இந்த விஷயத்தில் முழு கிணற்றையும் கடந்ததாக நாம் கருத முடியும் என்று முதலமைச்சர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

'என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்கு சாவடி' என்ற தலைப்பில் காணொளி காட்சி மூலமாக திமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் அக்கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டம் செயலாளர்கள் மட்டுமின்றி நிர்வாகிகளும் பங்கேற்றனர். ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் செயலாளர்கள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களும் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் காணொளி வாயிலாக பேசிய தமிழ்நாடு முதலமைச்சரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின், "தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையை பாதுகாக்கும் உயரிய நோக்குடன் பசி, உறக்கம், குடும்பம் ஆகியவற்றைத் துறந்து SIR பணிகளில் ஈடுபட்ட அனைவருக்கும் மனமார்ந்த பாராட்டுகள், வாழ்த்துகள். நாம் இவ்வளவு கஷ்டப்பட்டிருந்தும் பாதி கிணறு தான் கடந்துள்ளோம்.

வாக்காளர் சரிபார்ப்பு பணிகள் நிறைவடைந்து, நமது மக்களின் பெயர்கள் விடுபடாமல் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றால்தான் முழு கிணற்றையும் கடந்ததாக கருத முடியும். S.I.R. பணிகள் வாக்குரிமையை பாதுகாக்கும் அடிப்படைப் பணியாக இருந்தால், "என் வாக்குச்சாவடி – வெற்றி வாக்குச்சாவடி" என்பது நமது வெற்றியை உறுதிப்படுத்தும் தேர்தல் பணியாகும். எனவே, நாம் அனைவரும் களத்தில் மிகுந்த தீவிரத்துடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் ஆற்றலுக்கும், உழைப்புக்கும் முன் எவராலும் நிற்க முடியாது. எத்தனை எதிரிகள் வந்தாலும், எத்தனை அணிகள் செயல்பட்டாலும், தமிழ்நாட்டை மீண்டும் ஆளப்போவது உதயசூரியன் தான். உங்களை உற்சாகப்படுத்தும் நோக்கில் இதை கூறவில்லை, இதுதான் உண்மை. நம் திராவிட மாடல் அரசின் திட்டங்களின் மூலம், தமிழ்நாடு முழுவதும் ஒரு கோடியே 86 லட்சம் மக்கள் நேரடியாக பயனடைந்து வருகின்றனர். இதில் பயனாளிகளுடன் சேர்த்து திமுகவினரையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

முந்தைய ஆட்சிக் காலங்களில் மழை பெய்தாலே உதவிக்காக காத்திருந்த நிலையும், நிவாரணப் பொருட்கள் மற்றும் உணவு வழங்கும் முறையும் எவ்வாறு மாற்றம் அடைந்துள்ளது என்பதை மக்களுக்கு களத்தில் எடுத்துச் சொல்ல வேண்டும். நமது சிறப்பான பணிகளைப் பார்த்து நடுநிலை வாக்காளர்களும் இன்று நமக்கு ஆதரவாக நிற்கின்றனர். மொத்தமாக பயனாளிகள், கழகத்தினர், நடுநிலை வாக்காளர்கள் சேர்த்தால், இரண்டு கோடியே ஐம்பது லட்சம் வாக்குகளை தாண்டுவது சாத்தியமே," என்றார்.

மேலும் பேசிய அவர், "கடந்த 2021 சட்டப்பேரவைத் தேர்தலில் நமது கூட்டணி பெற்ற வாக்குகள் 2 கோடியே 9 லட்சம் வாக்குகள் தான். இந்த முறை, அதைவிட கூடுதல் வாக்குகளைப் பெறுவது உறுதி. இந்த புள்ளிவிவரங்களை முன்வைத்து, உங்கள் களப்பணியின் மீது உள்ள நம்பிக்கையோடு தெளிவாகக் கூறுகிறேன், நாம் தான் மீண்டும் ஆட்சியமைக்க உள்ளோம். இத்தனை சாதகமான சூழ்நிலைகள் இருந்தாலும், நம் எதிரிகளைக் குறைத்து மதிப்பிடக் கூடாது. சி.பி.ஐ, ஈ.டி, ஐ.டி, தேர்தல் ஆணையம் என இவை அனைத்தையும் அவர்கள் நமக்கு எதிராக பயன்படுத்துவார்கள்.

தினந்தோறும் ஏராளமான பொய்கள் பரப்பி, போலியான பிம்பங்களை உருவாக்குவார்கள், ஊடகங்களைப் பயன்படுத்தி பொய்ச் செய்திகளை பரப்புவார்கள். இவற்றை எதிர்கொள்ள, நமது பலத்தை

சரியாகப் பயன்படுத்த வேண்டும். ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் நமது வாக்குகளை உறுதி செய்திருக்க வேண்டும். ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் நமது கழகத்தினர் உற்சாகத்துடன் செயல்பட வைக்க வேண்டும்.

அதற்காகத் தான், "என் வாக்குச்சாவடி – வெற்றி வாக்குச்சாவடி" என்ற இந்தப் பரப்புரை. அந்தந்த வாக்குச்சாவடிக்குட்பட்ட மாநில நிர்வாகி முதல், வார்டு மற்றும் கிளைச் செயலாளர்கள் வரை அனைவரையும் இந்தக் கூட்டங்களில் பங்கேற்க அழைக்க வேண்டும். அந்த வாக்குச்சாவடியில் மூத்த கழக முன்னோடிகள் அல்லது ஏதேனும் அதிருப்தியாளர்கள் இருந்தால், அவர்களையும் தவறவிடாமல் அழைக்க வேண்டும்," என்றார்.

அத்துடன், "தேனாம்பேட்டையில், என் வாக்குச்சாவடியில் பகுதிச் செயலாளர் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் நானும் நேரடியாகப் பங்கேற்பேன். வீடு வீடாகச் செல்லும் பூத் கமிட்டி குழுக்களில் மகளிர் கட்டாயம் இடம்பெற வேண்டும். ஒவ்வொரு பூத் கமிட்டி உறுப்பினரும் வீடு வீடாகச் செல்வதை உறுதி செய்யுங்கள். வீடுவீடாக சென்று விடுபட்ட வாக்காளர்களின் விவரங்களை முறையாக சரிபார்க்க வேண்டும்.

ஒவ்வொரு வீட்டிலும், திராவிட மாடல் அரசின் சாதனைகள் அடங்கிய துண்டறிக்கைகள் வழங்கப்பட வேண்டும். நான் இரவிலும் உறங்காமல் உழைத்து வருகிறேன் என்பது உங்களுக்கே தெரியும். அதே அளவிலான உழைப்பை, உங்களின் ஒவ்வொருவரிடமிருந்தும் நான் எதிர்பார்க்கிறேன். ஒரு வாக்குச்சாவடியை வென்றால், ஒரு தொகுதியை வெல்லலாம்.

எனவே, இந்தத் தேர்தலில் ஒவ்வொரு வாக்குச்சாவடியும் மிக முக்கியமானது. உங்கள் வாக்குச்சாவடியில் வெற்றி பெற வேண்டிய பொறுப்பை உங்களிடமே ஒப்படைக்கிறேன். என் நம்பிக்கையை காப்பாற்றுங்கள்" என்று முதலமைச்சர் ஸ்டாலின் பேசினார்.

# 2026ல் அதிமுக ஆட்சி உறுதி

## எடப்பாடி பழனிசாமி

சென்னையில் நடைபெற்ற அதிமுக செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டத்தில் பேசும் போது, 2026 சட்டசபை தேர்தலில் அதிமுக தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியை அமைக்கும் என்று பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார். மகளிர் உரிமைத் தொகை வழங்கப்பட்டது அதிமுகவின் அழுத்தத்தால் ஏற்பட்டது என்றும் கூறினார். கூட்டத்தில் பல பகுதிகளிலிருந்து நிர்வாகிகள் பங்கேற்ற நிலையில், அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன் உடல்நலக் குறைவால் வராததால், கே.பி. முனுசாமி தற்காலிக தலைவராக நியமிக்கப்பட்டார்.

எம்ஜிஆர், ஜெயலலிதா வழியில் கட்சி பயணம் தொடரும் எனவும், கட்சி ஒன்றுபட்டால் அதிமுக ஆட்சியை எவராலும் தடுக்க முடியாது எனவும் அவர் வலியுறுத்தினார்.

கடந்த தேர்தல் முடிவுகளை எடுத்துக்காட்டிய அவர், சட்டசபைத் தேர்தலும், லோக்சபா தேர்தலிலும் வாக்களிப்பு மாறுபடும் என கூறினார். தற்போது



அதிமுக–பாஜக கூட்டணி 49% வாக்குகளை பெற்றுள்ளதை குறிப்பிட்டு வருங்காலத்தில் 210 தொகுதிகளில் வெற்றி பெறும் என்று கணித்தார்.

மகளிர் உதவித் தொகை, லேப்டாப் வழங்கல் போன்ற திட்டங்கள் திமுக அரசு தேர்தல் நோக்கத்திற்காக செய்கிறதாகவும், அதிமுக ஆட்சியின் சாதனைகளை மக்கள் நினைவில் வைத்துள்ளனர் என்றும் EPS தெரிவித்துள்ளார். திமுக ஆட்சியில் காவிரி படுகை விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

# மெஸ்ஸியை பார்க்க முடியல.. சால்ட் லேக் மைதானத்தை சூறையாடிய ரசிகர்கள்..

அர்ஜென்டினா கால்பந்து ஜாம்பவான் மெஸ்ஸியை பார்க்க டிக்கெட் வாங்கி மைதானத்தில் ஆயிரக்கணக்கான ரசிகர்கள் குவிந்தனர். நிகழ்ச்சி ஏற்பட்டாளர்கள் தரப்பில் மைதானத்தை சுற்றி மெஸ்ஸி வலம் வருவார் என்று சொல்லப்பட்ட சூழலில், அவர் பாதியிலேயே நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு வெளியேறினார். இதனால் கோபமடைந்த ரசிகர்கள் மைதானத்தில் இருந்த பொருட்களை சூறையாட தொடங்கினர். வாட்டர் பாட்டில்களை வீச தொடங்கினர். இதனால் ரசிகர்களை கட்டுப்படுத்த போலீசார் தடியடி நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அர்ஜென்டினா கால்பந்து ஜாம்பவான் லயோனல் மெஸ்ஸி 3 நாள் பயணமாக இந்தியா வந்துள்ளார். கொல்கத்தாவில் மெஸ்ஸிக்கு 70 அடி உயர சிலை அமைக்கப்பட்டுள்ளது. இதனை மெஸ்ஸி காணொளி மூலமாக திறந்து வைத்தார். இதையடுத்து கொல்கத்தாவில் உள்ள சால்ட் லேக் மைதானத்தில் ரசிகர்கள் முன்னிலையில் மெஸ்ஸி தோன்றுவார் என்று அறிவிக்கப்பட்டது.

அதற்காக டிக்கெட்டுகளும் விற்று தீர்ந்தன. நாடு முழுவதும் இருந்து ஆயிரக்கணக்கான டிக்கெட்டுகள் விற்பனை செய்யப்பட்டது. ஒரு டிக்கெட் மதிப்பு ரூ.4,500 முதல் ரூ.12,500 வரை விலையாக நிர்ணயிக்கப்பட்டது. அதேபோல் மெஸ்ஸி மைதானம் முழுக்க சுற்றி வந்து ரசிகர்களை சந்திப்பார் என்றும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டிருந்தது.



ஆனால் சிலையை திறந்து வைத்த மெஸ்ஸி, நேராக மைதானத்திற்கு வந்தார். ஆனால் 30 நிமிடங்கள் மட்டுமே மைதானத்தில் இருந்தார். அப்போது நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள், நட்சத்திரங்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்டோர் மெஸ்ஸியை சுற்றி இருந்தனர். அதுமட்டுமல்லாமல் மெஸ்ஸியின் பாதுகாவலர்கள் சுமார் 100க்கும் மேற்பட்டோர் அவரை சுற்றி காணப்பட்டனர்.

இதனால் மைதானத்தில் இருந்தே ரசிகர்களால் மெஸ்ஸியை பார்க்க முடியவில்லை. இதன்பின் அங்கிருந்து புறப்பட்ட, ரசிகர்கள் கொந்தளிக்க தொடங்கினர். ஒரு கட்டத்தில் கைகளில் இருந்த வாட்டர் பாட்டிலை வீசி எறிய தொடங்கினர். அதேபோல் மைதானத்தில் இருந்த சேர்களையும் உடைக்க தொடங்கினர். ஒரு கட்டத்தில் சூழல் கலவரமானது. இதனால் மெஸ்ஸியை பார்க்க சென்ற ரசிகர்கள் கலவரத்தை பார்க்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.







# புதுச்சேரியில் போலி மருந்து உற்பத்தி மோசடி ஊழல்: இந்திய கம்யூனிஸ்ட் கண்டன ஆர்ப்பாட்டம்




புதுச்சேரியில் போலி மருந்து உற்பத்தி மோசடி ஊழல் கண்டன ஆர்ப்பாட்டம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் அ.மு. சலீம் தலைமையில், கோரிமேடு மருந்து கட்டுப்பாட்டு துறை அலுவலகம் முன்பு நடைபெற்றது.

புதுச்சேரி இந்திய கம்யூனிஸ்ட் சார்பில், போலி மருந்து உற்பத்தி மோசடி ஊழல் கண்டன ஆர்ப்பாட்டம் கோரிமேடு மருந்து கட்டுப்பாட்டு துறை அலுவலகம் முன்பு நடந்தது.

புதுச்சேரி என்.ஆர்.காங்கிரஸ் - பா.ஜ.க கூட்டணி ஆட்சியில் போலி பத்திரப்பதிவு ஊழல், காமாட்சி அம்மன் கோவில் காரைக்கால் பார்வதீஸ்வரர் கோவில் சொத்து அபகரிப்பு ஊழல், பொதுப்பணித்துறை ஊழல், ஸ்மார்ட் சிட்டி திட்ட ஊழல், மதுபான தொழிற்சாலை அனுமதி ஊழல் என இந்த ஊழல் பட்டியலில் உச்சமாக, இப்போது போலி மருந்து உற்பத்தி தொழிற்சாலை ஊழல் பூதாகரமாக வெடித்துள்ளது. தோண்ட தோண்ட பூதம் கிளம்புவது போல போலி மருந்து உற்பத்தி தொழிற்சாலைகள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன.

உயிர் காக்கும் மருந்துகள், மகப்பேறுக்கான மருந்துகள் ரத்த அழுத்தம், நீரிழிவு தடுப்பு மருந்துகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. சுமார் 600 கோடி ரூபாய் மதிப்பு என்று சொன்னாலும் அதைவிட பல மடங்கு இருக்கும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த அளவு ஊழல் புதுச்சேரி அரசின் சுகாதாரத்துறைக்கும், மருந்து கட்டுப்பாட்டு துறைக்கும் தெரியாமல் நடந்திருக்க வாய்ப்பில்லை. இந்த துறைகளுக்கு பொறுப்பு வகிக்கின்ற சுகாதாரத் துறை அதிகாரிகள், இயக்குனர், செயலர், அமைச்சர் (முதலமைச்சர்) ஆகியோரின் கவனத்திற்கு வராமல் இந்த மோசடி நடந்திருக்காது என்றும், மக்கள் உயிரோடு விளையாடி இருக்கிற இந்த ஊழல் மோசடி பேர்வழிகளை கைது செய்து, அவர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்து கடுமையான தண்டனை கிடைத்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும், இந்த குற்ற வழக்குகளை கையாளும் சிறப்பு புலனாய்வு குழு போலீஸ் உறுதியான தயவு தாட்சியமின்றி நடவடிக்கை எடுத்து உடனடியாக நீதிமன்றத்திலிருந்து தப்பிக்கா வண்ணம் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று நடந்தது

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் அ.மு.சலீம் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், மாநில நிர்வாக உறுப்பினர் நாரா. கலை நாதன் தேசியக் குழு உறுப்பினர் இ.தினேஷ் பொன்னையா மாநில பொருளாளர் வ.சுப் பையா மாநில நிர்வாக குழு உறுப்பினர்கள் இரா. அந்தோணி, டி.பி. ரவி, சே. எழிலன், மூத்த தோழர்கள் ஆர். விஸ்வநாதன், து. கீதநாதன், வி.எஸ். அபிஷேகம், மாநிலக் குழு உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஆளுநரிடம் பட்டம் பெற மறுத்த மாணவி மீது நடவடிக்கையா?




நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக ஒருங்கிணைப்பாளரும் இந்திய மாணவர் சங்க நெல்லை மாவட்டச் செயலாளருமான சைலஸ் அருள்ராஜ், துணை ஒருங்கிணைப்பாளர்களான தூத்துக்குடி மாவட்டச் செயலாளர் ராம்குமார், தென்காசி மாவட்டச் செயலாளர் மதன்குமார், கன்னியாகுமரி மாவட்டச் செயலாளர் சந்துரு ஆகியோர் இணைந்து ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளனர். அதில் அவர்கள் கூறியதாவது:

நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், நாகர்கோவிலைச் சேர்ந்த ஜீன் ஜோசப் என்ற மாணவி மேடையில் இருந்த ஆளுநரிடம் முனைவர் பட்டம் பெற மறுத்து, அருகில் இருந்த துணைவேந்தரிடம் இருந்து பட்டம் பெற்றார். இதையடுத்து, ஆர்எஸ்எஸ் – ஏபிவிபி அமைப்பைச் சேர்ந்த நபர்கள், அந்த மாணவியின் முனைவர் பட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என பல்கலைக்கழக நிர்வாகத்திடம் புகார் அளித்தனர். மேலும், உயர் நீதிமன்ற மதுரை கிளையிலும் ஆர்எஸ்எஸ் சார்பில் வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கின் விசாரணையின் போது, “மாணவி ஆளுநரை அவமரியாதை செய்திருக்கிறாரா? அது தொடர்பாக பல்கலைக்கழகம் எந்த நடவடிக்கை எடுக்க முடியும்?” என விளக்கம் கோரியும் உத்தரவு வழங்கப்பட்டது. அதேசமயம், இனி இத்தகைய நிகழ்வுகள் நடைபெறாமல் இருப்பதற்காக மாணவர்களுக்கு வழிகாட்டு நெறிமுறைகளையும் வகுக்க வேண்டும் என்று நீதிபதிகள் வலியுறுத்தினர்.

உயர் நீதிமன்றத்தின் இந்த உத்தரவு மற்றும் கருத்துக்கள், அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துச் சுதந்திர உரிமைக்கு முரணானவை. ஆளுநரின் நடவடிக்கைகள் குறித்து மாணவி தெரிவித்த கருத்துக்கள் அவதூறு அல்லது அவமரியாதை அல்ல. எனவே, மாணவியின் கருத்துச் சுதந்திரத்திற்கு எதிராக தொடரப்பட்டுள்ள இந்த வழக்கில், தமிழ்நாடு அரசும் தன்னை ஒருதரப்பாக இணைத்துக் கொண்டு, கருத்துரிமையை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொடர்கிறது அமெரிக்க வர்த்தக பேச்சுவார்த்தை

அமெரிக்க ஜனாதிபதியாக டிரம்ப் பொறுப்பேற்றவுடனேயே அதிரடி நடவடிக்கைகளை தொடங்கினார். ‘அமெரிக்காவை மீண்டும் சிறந்த நாடாக ஆக்குவேன், அமெரிக்காதான் முதலில்’ என்ற பிரகடனங்களை முழங்கிய அவர், அனைத்து தொழில்களையும் அமெரிக்காவில் தொடங்க முயற்சிகளை எடுத்துவருகிறார். அமெரிக்காவுக்கு பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கெல்லாம் பரஸ்பர வரி விதித்தார். அந்தவகையில், இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் அனைத்து பொருட்களுக்கும் பரஸ்பர வரியாக 25 சதவீத வரி நிர்ணயிக்கப்பட்டது. இவ்வளவுக்கும் அமெரிக்காவில் இருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்கள்தான் அதிகம்.

இந்த பரஸ்பர வரி மட்டுமல்லாமல் ரஷியாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் வாங்குகிறது, அந்த தொகையை வைத்துத்தான் ரஷியா உக்ரைனுடன் நடத்தும் போருக்காக செலவழிக்கிறது என்று சாக்குபோக்கு சொல்லி அதற்கு அபராதமாக மேலும் 25 சதவீத வரி என மொத்தம் 50 சதவீத வரியை இந்தியாவுக்கு அமெரிக்கா விதித்துள்ளது. அமெரிக்கா, பிறநாடுகள் மீது விதிக்கும் வரியில் அதிகபட்சம் இதுதான். இந்த வரி விதிப்பால் இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகும் ஆடைகள், கடல்சார் பொருட்கள், என்ஜினீயரிங் பொருட்கள், தோல் பொருட்கள் போன்றவற்றின் ஏற்றுமதி 8.9 சதவீதம் குறைந்துவிட்டது. தமிழ்நாட்டில் திருப்பூரில் உற்பத்தி செய்யப்படும் ஆடைகள், ஆம்பூர், வேலூரில் இருந்து தயாராகும் தோல்பொருட்கள் ஏற்றுமதியிலும் கடுமையான பாதிப்பு ஏற்பட்டது. தொடர்ந்து வரும் இந்த பிரச்சினைக்கு வர்த்தக பேச்சுவார்த்தைதான் முற்றுப்புள்ளி வைக்கும் என்று இரு நாடுகளும் கருதுகின்றன.

ஏற்கனவே 5 சுற்று பேச்சுவார்த்தை நடந்தும் எந்த முடிவும் எட்டப்படவில்லை. மார்ச் மாதத்தில் தொடங்கிய இந்த வர்த்தக பேச்சுவார்த்தை கடைசியாக அக்டோபர் மாதத்தில் நடந்தது. ஆனாலும் இதுவரை வரி குறைப்பு பற்றிய உறுதியான எந்த முடிவுகளும் எடுக்கப்படவில்லை. கடந்த வாரம் ரஷிய அதிபர் புதின் 2 நாட்கள் சுற்றுப்பயணமாக இந்தியா வந்து,




பிரதமர் நரேந்திர மோடியுடன் டெல்லியில் நடந்த உச்சி மாநாட்டில் கலந்துகொண்டார். இதுவரை புதின் இந்தியாவுக்கு 10 முறை வந்திருந்தாலும், இந்த தடவை இரு நாடுகளுக்கும் பயன் அளிக்கும் வகையிலான 16 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. இந்த சூழ்நிலையில் அமெரிக்கா-இந்தியா இடையேயான வர்த்தக பேச்சுவார்த்தை இன்று முதல் 3 நாட்கள் டெல்லியில் நடக்கிறது. அமெரிக்க குழு, அந்நாட்டு துணை வர்த்தக பிரதிநிதி ரிக் சுவிட்சர் தலைமையிலும், இந்திய குழு வர்த்தக அமைச்சக செயலாளர் ராஜேஷ் அகர்வால் தலைமையிலும் சந்தித்து மிக ஆழமாக விவாதிக்கிறது.

அமெரிக்க அரசியல் பதவிகளில் ரிக் சுவிட்சர் மிக உயர்ந்த இடத்தில் இருப்பதால் டெல்லியில் நடக்கும் இருதரப்பு பேச்சுவார்த்தையில் அமெரிக்கா விதிக்கும் 50 சதவீத வரி பிரச்சினை விவகாரத்தில் அதிகாரப்பூர்வமான முடிவுகளை அவரால் எடுக்கமுடியாது. என்றாலும் அதற்கான வாசலை திறக்க, குறிப்பாக பரஸ்பர வர்த்தக ஒப்பந்தத்தை உருவாக்குவதற்கான வழிமுறைகளை உருவாக்கும் நடவடிக்கைகளுக்கு வழிகோல முடியும். இந்த பரஸ்பர வர்த்தக ஒப்பந்தத்துக்காக இந்தியா தரப்பில் எடுத்து வைக்கப்படும் புள்ளி விவரங்களும், அதுபோல அமெரிக்கா தரப்பில் முன்வைக்கப்படும் விவரங்களும் இரு நாடுகளின் குழுக்களால் மிக விரிவாக விவாதிக்கப்பட்டு, இரண்டு தரப்பினரும் விரும்பத்தகுந்த ஒரு நல்ல முடிவை எடுக்க பாதையை வகுக்கப்போகிறது என்று மக்கள் கருதுகிறார்கள்.

# தஞ்சை கொடூரம்:
# தடம் மாறும் மாணவர்கள்! ஒழுங்குபடுத்துவது யார்?



தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அருகே உள்ள பட்டீஸ்வரம் அண்ணா அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் ஏற்பட்ட மாணவர் மோதல் உயிரிழப்பாக முடிந்து பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. 12ஆம் வகுப்பு மாணவர் ஒருவரை 11ஆம் வகுப்பு மாணவர்கள் குழு தாக்கியதில், அவர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சில மாதங்களுக்கு முன்பே இரு வகுப்பு மாணவர்களுக்கும் இடையே சிறிய சண்டை, வாக்குவாதம் போன்ற பிரச்சனைகள் ஏற்பட்டிருந்ததாக கூறப்படுகிறது. அதில் 11ஆம் வகுப்பு மாணவர் ஒருவர் காயமடைந்ததைத் தொடர்ந்து போலீசில் புகார் அளிக்கப்பட்டது. மாணவர்கள் குறைந்த வயதினர் என்பதால், போலீசார் பெற்றோரை அழைத்து சமரசம் செய்து அனுப்பி வைத்தனர்.

ஆனால் இந்த பிரச்சனை மீண்டும் தீவிரமடைந்து டிசம்பர் 4ஆம் தேதி பள்ளி விடுமுறைக்கு பிறகு 10க்கும் மேற்பட்ட 11ஆம் வகுப்பு மாணவர்கள் கோயில் வாசல் அருகே காத்திருந்தார்கள். அப்போது சிறப்பு வகுப்பு முடித்து வந்த 12ஆம் வகுப்பு மாணவரை அவர்கள் கட்டையால் தாக்கி தப்பிச் சென்றதாக தகவல்.

காயமடைந்த மாணவர் முதலில் அருகிலுள்ள சுகாதார நிலையத்திலும் பின்னர் கும்பகோணம் அரசு மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றார். நிலை மோசமடைந்ததேயன்றி, தஞ்சாவூர் தனியார் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டும் உயிரிழப்பு தவிர்க்க முடியவில்லை.

இந்த தாக்குதலில் ஈடுபட்ட 15 மாணவர்களையும் போலீசார் கைது செய்து, மருத்துவ பரிசோதனைக்குப் பிறகு இளஞ்சிறார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். பின்னர் அவர்கள் கூர்நோக்கு இல்லத்தில் அடைக்கப்பட்டனர்.

மாணவர் மோதல் உயிரிழப்பாக முடிவடைந்தது கல்வி சூழலில் பாதுகாப்பு மற்றும் மாணவர்களிடையேயான ஒழுங்கு பிரச்சனைகள் குறித்து தீவிர கேள்விகளை எழுப்பியுள்ளது.



தமிழகத்தில் ஏதாவது ஒரு கிராமத்தில் வரவிருக்கும் பொங்கல் பண்டிகையை விவசாயிகளுடன் கொண்டாட பிரதமர் மோடி திட்டமிட்டு இருக்கிறார். இதற்காக அவர் பொங்கல் பண்டிகையை ஒட்டி தமிழக வரவுள்ளதாக தகவல். அடுத்த ஆண்டு தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தல் நடக்க இருப்பதால் அதற்கான பிரச்சார முன்னோட்டம் தான் இந்த நிகழ்ச்சியாம்.

# இந்திய ரூபாய் வரலாறு காணாத சரிவில்: டாலருக்கு 90 ரூபாய்!

இந்தியாவுக்கு பணம் ரூபாய் என்பதுபோல, இங்கிலாந்துக்கு பவுண்ட், சீனாவுக்கு யுவான் என ஒவ்வொரு நாட்டுக்கும் வெவ்வேறு பணம் இருக்கிறது. ஆனால் சர்வதேச அளவில் வர்த்தகங்களை அனைத்து நாடுகளும் பொதுவாக அமெரிக்க டாலரில்தான் மேற்கொள்கின்றன. ஆக ஒவ்வொரு நாட்டின் பணத்தின் மதிப்பும் அமெரிக்க டாலருக்கு இணையாக அதன் மதிப்பு எவ்வளவு என்பதை பொறுத்துதான் இருக்கிறது. அதாவது, ஒரு டாலரை வாங்கவேண்டுமென்றால் அந்தந்த நாட்டின் பணத்தில் எவ்வளவு கொடுக்கவேண்டும் என்பதை அளவீடாக வைத்துதான் அந்த பணத்தின் மதிப்பு கணக்கிடப்படுகிறது. தொடக்க காலங்களில் அமெரிக்க டாலருக்கு சற்று இணையான மதிப்பிலேயே இந்திய ரூபாய் இருந்தது.

இந்தியா சுதந்திரம் அடைந்த நேரத்தில் அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ரூ.3.3 ஆக இருந்தது. அதன்பிறகு 1982-ம் ஆண்டு வரை ஒற்றை இலக்கத்திலேயே ரூபாயின் மதிப்பு இருந்தது. குறிப்பாக 17 ஆண்டுகள் அதாவது 1966-ம் ஆண்டு முதல் 1982-ம் ஆண்டு வரை டாலருக்கு இணையாக இந்திய ரூபாய் ரூ.7-ல் இருந்து ரூ.9.46 வரைதான் இருந்தது. 1983-ம் ஆண்டு முதல் இரட்டை இலக்கத்துக்கு தாவிய ரூபாயின் மதிப்பு கிடுகிடுவென மதிப்பிழக்கத் தொடங்கி 2012-ல் ரூ.50-ஐ தாண்டி ரூ.53.44 ஆக உயர்ந்தது. அதன்பிறகு, இறங்காமல், ஏறுமுகத்திலேயே இருந்தது. இது எதில் போய் முடியுமோ? என்று எல்லோரும் ஏக்கத்துடனேயே பார்த்தனர். ஏனெனில் இந்திய ரூபாயின் மதிப்பு நாட்டின் பொருளாதாரத்தில் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

கடந்த 21-ந்தேதி டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு ரூ.89-ஐ வரலாற்றிலேயே முதல் முறையாக தாண்டியவுடன் அதுவே அனைத்து பத்திரிகைகளிலும் முக்கிய செய்தியாகியது. நேற்று ரூபாயின் மதிப்பு ரூ.89.89 ஆக உயர்ந்துவிட்டது. இதனால் ஏற்றுமதியாளர்களுக்கு லாபம் என்றாலும், இறக்குமதி செய்பவர்கள் இந்திய ரூபாய் மதிப்பில் அதிக தொகையை கொடுக்கவேண்டியது இருக்கும்.

இதுபோல வெளிநாடுகளுக்கு சுற்றுலா செல்பவர்கள்,



வெளிநாடுகளில் படிக்கும் மாணவர்கள் அதிக பணம் செலவழிக்கவேண்டிய நிலை ஏற்படும். ஆனால் கடந்த அக்டோபர் மாதத்தில் வர்த்தக பற்றாக்குறை அதாவது ஏற்றுமதியை விட இறக்குமதி ரூ.3.66 லட்சம் கோடியாக இருந்தது. இவ்வாறு ரூபாய் மதிப்பு குறைவதால் இந்தியாவுக்குதான் இழப்பு.

அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் விதித்த 50 சதவீத வரிதான் ரூபாய் மதிப்பு குறைவதற்கு முக்கிய காரணமாக கூறப்படுகிறது. இதனால்தான் ஏற்றுமதி வெகுவாக பாதிக்கப்பட்டு, வர்த்தக பற்றாக்குறைக்கு வழிவகுத்துவிட்டது. தங்கம் விலை அதிகமாக உயர்ந்ததையும் மற்றொரு காரணமாக நிபுணர்கள் கூறுகிறார்கள். மேலும் கடந்த 3 மாதங்களாக அன்னிய நேரடி முதலீடுகள் இந்தியாவில் இருந்து எடுத்து செல்லப்படுவதும், இப்போதைய நிலையை உருவாக்கிவிட்டது.

முதலீட்டாளர்கள் தங்கள் பாதுகாப்பான புகலிடமாக டாலரைத்தான் பார்க்கிறார்கள். இத்தகைய காரணங்கள்தான் ஆசியாவிலேயே மிக மோசமான செயல்பாடு உள்ள பணமாக ரூபாயை பார்க்கும் அளவுக்கு கொண்டுவந்துவிட்டது. நேற்று டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு ரூ.89.89 ஆக இருக்கும் நிலையில் அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தம் விரைவில் மேற்கொள்ளவில்லையென்றால் ரூபாயின் மதிப்பு குதிரை பாய்ச்சலில் ரூ.100-ஐ தொடப்போவதை யாரும் தடுக்கமுடியாது. இதனால் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலை உயரும் என்பது மட்டுமல்லாமல் இந்திய பொருளாதாரத்திலும் பெரும் பாதிப்பு ஏற்படும்.

# பாஜக தேர்தல் ஆணையத்தின் சுயாட்சியை பலவீனப்படுத்துகிறது!

## ராகுல் காந்தி காட்டம்

லோக்சபாவில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் (SIR) குறித்து நடந்த விவாதம் தீவிரத்தையும் அரசியல் சூட்டையும் பெற்றது. இதில் கலந்து கொண்ட காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, தேர்தல் ஆணையத்தின் சுயாட்சிக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்புகளை நேரடியாகக் குறிப்பிட்டு ஒன்றிய பாஜக அரசை குற்றம் சாட்டினார். வாக்காளர் பட்டியல் திருத்தத்தின் பெயரில் அரசியல் நோக்கத்திற்காக விளிம்பு சமூகங்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றன என்பதை அவர் விரிவாக விளக்கினார். "ஜனநாயகத்தின் முதுகெலும்பான தேர்தல் ஆணையத்தின் சுதந்திரம் குறைக்கப்பட்டால், அதன் தாக்கம் நாடு முழுவதும் உணரப்படும்" என ராகுல் எச்சரித்தார்.

மேலும் இந்த விவாதத்தின் போது, ராகுல் காந்தி மூன்று முக்கிய கேள்விகளை அரசு முன் வைத்தார். முதன்மையாக தேர்தல் ஆணையத்தின் சுயாட்சி ஏன் மெல்ல மெல்ல பலவீனமாக்கப்பட்டுள்ளது, ஆணைய அதிகாரிகள் நியமனத்தில் அரசியல் கண்ணோட்டம் ஏன் அதிகரித்துள்ளது என்பதையும் அவர் கேட்டார். இரண்டாவது SIR செயல்முறையில் ஏற்படும் மோசடிகளைத் தடுக்க தெளிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளனவா என்பது குறித்தும் சந்தேகம் எழுப்பினார். மூன்றாவது தேர்தல் ஆணைய நியமனங்களில் வெளிப்படையான சீர்திருத்தங்களை அரசு ஏற்கத் தயாரா என்பதை மக்களவையின் முன் வினவினார்.

ராகுல் காந்தி, வாக்காளர் பட்டியல் திருத்தத்தின் பெயரில் போலி வாக்காளர்களை நீக்குவது என்ற அரசின் விளக்கத்தில் சீர்கேடு இருப்பதாகக் கூறினார். அரசு சொல்வது போல போலி வாக்காளர்கள் நீக்கப்படாமல், சமூக, பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட மக்களின் பெயர்கள்தான் பெருமளவில் அகற்றப்படுகின்றன என அவர் ஆதாரத்துடன் குற்றம் சாட்டினார். மேலும் வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கம் என்பது ஒரு சாதாரண நிர்வாகப் பிழை அல்ல இது ஒருவரின் அரசியல் குரலைப் பறிக்கும் பெரிய ஜனநாயக பிரச்சினை என அவர் வலியுறுத்தினார்.




தேர்தல் ஆணையம் முழுமையான வெளிப்படையான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும், நிலத்தர ஆய்வு முதல் வீட்டு சரிபார்ப்பு வரை பல நிலை கண்காணிப்புகள் வலுப்படுத்தப்பட வேண்டும் என்று ராகுல் காந்தி வலியுறுத்தினார். மேலும், தேர்தல் ஆணைய நியமனங்களில் அரசியல் தலையீடுகள் அதிகரித்திருப்பது நம்பிக்கையின்மை சூழ்நிலையை உருவாக்கி வருவதால், அதற்கான மாற்றுக்கட்டமைப்பு தேவை என அவர் கூறினார். "வாக்குரிமை என்பது ஒரு குடிமகனின் அடிப்படை சக்தி அதை குலைக்க முயற்சிப்பது ஜனநாயகத்தின் நெய்யப்பட்ட துணியை கிழிக்கும் செயல்" என அவர் சொன்னது விவாதத்தின் முக்கிய அம்சமாகியது.

SIR தொடர்பான விவகாரத்தில் எதிர்க்கட்சிகள் ஒன்றுபட்டு அரசை கடுமையாக குற்றம் சாட்டி வரும் நிலையில், இந்த விவாதம் நாடு முழுவதும் அரசியல் நோக்கர்கள் மற்றும் பொதுமக்களிடையே பெரும் விவாதமாக மாறியுள்ளது எனவே ஒன்றிய அரசு ராகுல் காந்தியின் கேள்விகளுக்கு எவ்வாறு பதிலளிக்கும், தேர்தல் ஆணையத்தின் சுயாட்சியைப் பாதுகாக்க எந்த நடவடிக்கைகளைக் கையாளப் போகிறது என்பதே தற்போது தேசிய அளவில் கவனத்தை ஈர்த்திருக்கிறது.




# உச்சிப்புளி-கீழக்கரையில் AAI ஆய்வு! ராமேஸ்வரம் விமான நிலையத் திட்டம் நிறைவேறுமா?

ராமேஸ்வரம் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் பல தசாப்தங்களாக நிலவி வந்த “விமான நிலையம் வேண்டும்” என்ற கோரிக்கை தற்போது செயல்படுத்தக்கூடிய நிலைக்கு வந்துள்ளது. ராமேஸ்வரத்தில் புதிய விமான நிலையம் அமைக்க இந்திய விமான நிலைய ஆணையம் (AAI) இரண்டு இடங்களைத் தேர்வு செய்து விரிவான ஆய்வு செய்திருப்பது இதில் மிக முக்கிய முன்னேற்றமாகக் கருதப்படுகிறது.

புனித ராமேஸ்வரம் திருத்தலம் நாடு முழுவதும் இருந்து ஆண்டுதோறும் ஏராளமான பக்தர்களை வரவேற்கிறது. குறிப்பாக வடஇந்திய மாநிலங்களில் இருந்து வருபவர்கள் மதுரை, தூத்துக்குடி, திருச்சி போன்ற விமான நிலையங்களில் இறங்கி, பின்னர் சாலை மார்க்கமாக 3–4 மணி நேரம் பயணம் செய்ய வேண்டியிருப்பது நீண்டகாலமாக சிரமமாகச் சொல்லப்பட்டு வருகிறது. இதனால், ராமநாதபுரம் மாவட்டத்திலேயே ஒரு தனித்த விமான நிலையம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை பல நிலைகளில் எழுந்தது.

உடான் (UDAN) பிராந்திய இணைப்பு திட்டத்தின் கீழ் ராமநாதபுரம் விமான நிலையத்திற்காக ரூ.36.72 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மாநில அரசும் தனது பட்ஜெட்டில் இந்த திட்டத்தை அறிவித்து ஆதரவு தெரிவித்துள்ளது. விமான நிலையம் அமைக்க குறைந்தது 600–700 ஏக்கர் நிலம் தேவைப்படுவதால், அதன் அடிப்படையில் பொருத்தமான இடத்தைத் தேர்வு செய்வதே முக்கியமான நிலை.


இதனை முன்னிட்டு, AAI பொறியியல் மற்றும் நிபுணர் குழு உச்சிப்புளி பகுதியில் உள்ள பெருங்குளம், கும்பரம், வாலாந்தரவை உள்ளிட்ட இடங்களையும், கீழக்கரை அருகிலுள்ள மணிக்கனேரி, மாயாகுளம் பகுதிகளையும் நேரில் பார்வையிட்டது. ஒவ்வொரு இடத்திலும் நில அமைப்பு, காற்றோட்டம், விமான ஓடுதளம் அமைப்பதற்கான இயல்பான திசை, சுற்றுச்சூழல் தாக்கம், சாலை மற்றும் ரயில் இணைப்பு, அருகிலுள்ள பாதுகாப்புப் பகுதிகளின் தாக்கம் போன்ற பல்வேறு தொழில்நுட்ப அம்சங்கள் முழுமையாக ஆய்வு செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

AAI-யின் பரிந்துரைகள் மற்றும் தொழில்நுட்ப அறிக்கை மாநில அரசுக்கு விரைவில் அனுப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்த அறிக்கை அடிப்படையில் தமிழக அரசு இறுதி இடத்தைத் தேர்வு செய்து அறிவிப்பார்கள். ஒப்புதல் கிடைத்ததும் நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகள், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA), திட்ட வடிவமைப்பு போன்றவை தொடங்கும். இதன் மூலம் ராமேஸ்வரம் விமான நிலையத்தின் பணி நிலைநாட்டப்படும் வாய்ப்பு தற்போது குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது.

மாவட்ட மக்கள், தொழில் வட்டாரங்கள் மற்றும் சுற்றுலா துறையினர், இந்த விமான நிலையம் அமைந்தால் ராமேஸ்வரம்–ராமநாதபுரத்தின் பொருளாதார வளர்ச்சி, சுற்றுலா வருகை மற்றும் வேலைவாய்ப்பில் பெரிய முன்னேற்றம் ஏற்படும் என நம்பிக்கை தெரிவித்து வருகின்றனர்.

# கும்பகோணம்: நவகிரக கோவில்கள்

கும்பகோணம் மற்றும் அதன் சுற்றுவட்டாரத்தில் அமைந்துள்ள நவகிரகத் தலங்கள் இந்தியாவின் மிகப் பெரும் ஆன்மிக மையங்களில் ஒன்றாக கருதப்படுகின்றன. கிரகப் பிரச்சினைகளுக்கு நிவாரணம் அளிப்பதோடு மட்டுமின்றி, மன அமைதி, குடும்ப நலன், தொழில் முன்னேற்றம், ஆரோக்கியம் மற்றும் பாக்கியவளர்ச்சி போன்ற பல தெய்வீக பலன்களையும் வழங்கும் இடங்களாக இவை பரவலாக நம்பப்படும். இத்தலங்கள் அனைத்தும் ஒரே நாளில் சுலபமாக தரிசிக்கக்கூடிய நெருக்கமான தூரங்களில் அமைந்துள்ளன. ஸ்கந்த புராணம் மற்றும் பிரம்மாண்ட புராணங்களில், அமிர்தக் கும்பம் பூமியில் விழுந்தபோது பாவங்களைத் தீர்க்க, அத்துளிகள் நவகிரக தலங்களாக விரிந்தன என்று குறிப்பிடப்படுகிறது. அதனால் தான் நவகிரகங்களின் சக்தி இங்கு ஏனைய தலங்களை விட சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது.




கும்பகோணத்தில் காலை 6 மணிக்கு துவங்கினால் மாலை 6 மணிக்குள் ஓய்வுடன் தரிசனம் முடிக்கலாம். இதோ, பக்தர்கள் நேரம் வீணாகாமல் செல்வதற்கான மிக எளிய, திசை ஒழுங்கில் அமைந்த 'சரியான' பயணத் திட்டம் கும்பகோணம் → சூரியன் → புதன் → சுக்கிரன் → செவ்வாய் → சனி → குரு → ராகு → கேது → சந்திரன்.

பயணிகள் தேவையற்ற திரும்பிச் செல்லும் தூரமும், நேர இழப்பும் இல்லாமல், மிகச் சிறந்த திசைவரிசையில் பயணம் செய்யும்படி ஏற்படுத்தப்பட்ட பாதை மிகவும் பயனுள்ளதாக பார்க்கப்படுகிறது. இந்த வரிசை ஆன்மீக நோக்கங்களுக்குப் பொருத்தமாக இருப்பதோடு, இடைவெளி கணக்கிலும் மிகவும் வசதியானதாகும்.

**(1) சூரிய நாராயணர் கோவில் – சூரியன் (37 நிமிடங்கள்)**

கும்பகோணத்திலிருந்து கிழக்கு திசையில் 37 நிமிட பயணமே சூரியனார் கோவிலுக்கு சென்றால், நவகிரக யாத்திரையின் 'ஒளி நிறைந்த' துவக்கம். இங்கு சூரியப் பகவான் தனியாக தனி சன்னதியுடன் அருள்பாலிக்கிறார். புராணங்களில் சூரியன், சிவபெருமானிடம் தவம் செய்து தனது பிரகாசத்தை பெற்றார் என்று குறிப்பிடப்படுகிறது. தந்தை, கண் ஒளி, ஆரோக்கியம், மன வலிமை ஆகியவற்றை அளிப்பவர் என்பதால், ரவிவாரங்களில் இங்கு தரிசனம் மிக முக்கியமானதாக கருதப்படுகிறது. சூரியனை முதலில் தரிசிக்க வேண்டிய காரணம் — வாழ்க்கையில் உள்ள இருளை முதலில் நீக்கும் சக்தி இவரிடமே உள்ளது என்பதே. இதுவே பக்தர்கள் பயணத்தைத் தொடங்கும்போது பெறவேண்டிய முதல் அங்கீகாரம்.

**(2) திருவெங்காடு (ஸ்வேதாரண்யேஸ்வரர் கோவில்) – புதன் (10 நிமிடங்கள்)**

சூரியனார் கோவிலிலிருந்து சற்று வடக்கே 10 நிமிட பயணமே திருவெங்காடு. இங்கு ஸ்வேதாரண்யேஸ்வரர் அருளால் புதன் பகவான் நவகிரகப் படியில் முக்கிய ஸ்தானம் பெறுகிறார். புதன் அறிவுக்கும், பகுத்தறிவுக்கும், கல்விக்கும் பிரதான கிரகமாக கருதப்படுகிறார். திருவெங்காட்டின் சிறப்பு என்னவெனில் — அகோர மூர்த்தி தரிசனம். சிவன் அருளால் உலகத்தின் அசுர சக்திகளைக் காப்பாற்றிய வரலாறு இங்கு உயிருடன் நிற்கிறது. மாணவர்கள், தொழில் முன்னேற்றம் நாடுபவர்கள், வணிகர்கள் ஆகியோர் குறிப்பாக இங்கு வழிபடுவர்.

**(3) கஞ்சனூர் (அக்னீஸ்வரர் கோவில்) – சுக்கிரன் (20 நிமிடங்கள்)**

திருவெங்காட்டிலிருந்து தெற்கே 20 நிமிடத்தில் கஞ்சனூர். சுக்கிரன் செல்வ வளம், திருமண வாழ்வு, கலை திறமை, குடும்ப அமைதி ஆகியவற்றைப் பொறுத்தவர். இங்கு ஒரு தனித்தன்மை: சுக்கிரன்

தனியாக அல்ல, அக்னீஸ்வரரின் கிருபையில் ஆராதிக்கப்படுகிறார். 'மகாலட்சுமி அருள் பொங்கும் தலம்' என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. திருமண தோஷம், வியாபார நஷ்டம் உள்ளவர்கள் இங்கு வழிபட்டால் நல்ல பலன் கிடைக்கும் என்பது அனுபவம்.

**(4) வைத்தீஸ்வரன் கோவில் – செவ்வாய் (15 நிமிடங்கள்)**

கஞ்சனூரிலிருந்து 15 நிமிடத்தில் செவ்வாய் பகவான் – வயலூர் (வைத்தீஸ்வரன் கோவில்). ஆங்காரகன் அல்லது செவ்வாய், ரோகநிவாரண கிரகமாக அறியப்படுகிறார். வைத்தீஸ்வரன் கோவிலில் சிவன் வைத்யநாதராக அருள்பாலிப்பதால், இந்த தலம் நோய் நீக்கும் சக்தியால் பிரபலமாக இருக்கிறது. இங்கு 'வெற்றிலைக்கு நாமம் எழுதுதல்', 'மிளகு – பொன்னம்பலம் நிவேதனம்' போன்றவை பழமையான மரபுகள். செவ்வாய் தோஷம், உடல் வலி, மன அழுத்தம் உள்ளவர்கள் தவறாமல் இங்கு தரிசனம் செய்ய வேண்டும்.

**(5) திருநள்ளாறு (தர்பாரணேஸ்வரர் கோவில்) – சனி (25–30 நிமிடங்கள்)**

செவ்வாய் தரிசனம் முடித்த பின் சற்று தென்மேற்கே அடுத்து 25 நிமிட பயணத்தில் திருநள்ளாறு. நவகிரகங்களில் பக்தர்கள் அதிகம் பயப்படும் கிரகம் சனீஸ்வரனே. ஆனால் அவர் 'தர்மத்தின் தந்தை' என்று புராணங்கள் கூறுகின்றன. இங்கு தர்பண தீபம், எள் நீர் அபிஷேகம், கருப்பு ஆடை சமர்ப்பணம் ஆகியவை சனி தோஷ நிவாரணப் பரிகாரங்களாக கருதப்படுகின்றன. திருநள்ளாற்றில் 'நலன்' மன்னர் கதையே ஸ்தல புராணத்தின் அடிப்படை. சனீஸ்வரன் பரீட்சித்த நலன் அரசன் இறுதியில் நன்மை அடைந்ததாகக் கூறும் இந்த வரலாறு, சனியின் கருணை எப்போதும் தாமதமாய் வரினும் நிச்சயம் நன்மை தரும் என்பதை உணர்த்துகிறது.

**(6) ஆலங்குடி (ஆபத்சகாயேஸ்வரர் கோவில்) – குரு (30 நிமிடங்கள்)**

திருநள்ளாற்றிலிருந்து வடக்கே 30 நிமிட பயணத்தில் ஆலங்குடி. இங்கு தட்சிணாமூர்த்தி அருளால் குரு பகவான் ஜீவராசிகளுக்கு ஞானம், கல்வி, பிள்ளைப்பேறு, நல்ல வாய்ப்பு, ஆதரவு ஆகியவற்றை வழங்கும் கிரகமாக வழிபடப்படுகிறார். பிள்ளைப் பருவம் தாமதமாகும் குடும்பங்கள், கல்வி முன்னேற்றம் நாடுவோர், ஆசீர்வாதம் தேவைப்படும் தம்பதிகள் அதிகமாக இங்கு வருவது மரபு.

**(7) திருநாகேஸ்வரம்(நாகபுருஷநாயக ஸ்வாமி) – ராகு (20 நிமிடங்கள்)**

ஆலங்குடியிலிருந்து கிழக்கு திசையில் 20 நிமிடத்தில் திருநாகேஸ்வரம். ராகு பகவானின் அபிஷேக அற்புதம் இங்கு நடப்பதால், உலகம் முழுவதிலிருந்தும் பக்தர்கள் வருகிறார்கள். இங்கு பால் அபிஷேகம் செய்யும்போது, பால் நீலமாக மாறுவது ராகுவின் சக்தி வெளிப்பாடாக கருதப்படுகிறது. இது விஞ்ஞான ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் ஆராய்ச்சி செய்யப்படும் ஒரு விசேஷம். ராகு ஆசைகள், வேலை வாய்ப்பு, திடீர் திருப்பங்கள், வெளிநாட்டு பயணங்கள் ஆகியவற்றிற்கான கிரகமாக கருதப்படுகிறார்.

**(8) கீழ்வண்ணம் (நல்லநாயகி சமேத நாகநாதர் கோவில்) – கேது (15 நிமிடங்கள்)**

அடுத்ததாக 15 நிமிட பயணத்தில் கேது பகவான் – கீழ்வண்ணம். இங்கு ராகுவின் 'உடன்பிறப்பு' என்று கூறப்படும் கேது, ஞானத்தின் காரகன். கீழ்வண்ணத்தில் சிவன் 'நாகநாதர்' வடிவில் அருள்பாலிக்கிறார். கேது பாம்பு தோஷ நிவாரணத்திற்கும், ஆன்மிக வளர்ச்சிக்கும், தியான சக்தி பெரிதாக உயரும் தலமாகவும் போற்றப்படுகிறார். இங்கு பாம்பு வழிபாட்டின் அடையாளமாக நாகர்கல் சமர்ப்பணம் செய்வது மிகப் பழமையான மரபு.

**(9) திங்களூர் – சந்திரன் (10 நிமிடங்கள்)**

கீழ்வண்ணத்திலிருந்து மேற்கே 10 நிமிட பயணத்தில் திங்களூர் வந்தால், நவகிரகப் பயணத்தின் இறுதி தரிசனத்தைப் பெறலாம். சந்திர பகவான் மனதின் அதிபதி. மன அமைதி, குடும்ப அமைதி, மன அழுத்த நிவாரணம், உணர்ச்சி சமநிலை ஆகியவற்றை வழங்குபவர். சோமவாரத்தில் இங்கு நடக்கும் அபிஷேகம் மிகப் பிரபலமானது. ஸ்தல புராணத்தில், சந்திரன் தன் அழகை இழந்தபோது சிவபெருமானிடம் செய்த தவமே இங்கு அமைந்ததாகக் கூறப்படுகிறது.

**ஒரே நாளில் நவகிரக தரிசனம் – பயணத்தின் பயன்**

ஒன்பது கிரகங்களும் வாழ்க்கையின் ஒன்பது சக்திகளை பிரதிபலிக்கின்றன. நவகிரக யாத்திரை செய்த பக்தரின் வாழ்க்கையில் — தடைகள் குறையும்; மன அமைதி அதிகரிக்கும்; செல்வ வளம் சேரும்; குடும்ப பிணக்குகள் சரியாகும்; ஆரோக்கியம் மேம்படும்; ஆன்மிக சக்தி உயரும்; வாய்ப்புகள் அதிகரிக்கும். இந்த ஒன்பது கிரகங்களின் தரிசனம், பக்தரின் வாழ்க்கையை சமநிலை படுத்தி, திசை திருப்பி, ஒளியும் நம்பிக்கையும் நிரப்பும் ஒரு அபூர்வ ஆன்மீக அனுபவம்.

கும்பகோணம் — அதுவே இந்த பயணத்தின் இதயம்; நவகிரகங்கள் — அதன் ஒன்பது துடிப்புகள். ஒரே நாளில் முழுமையான ஆன்மீக நிறைவை தரும் இந்த நவகிரகப் பயணம், பக்தரின் வாழ்வில் ஒளியை பரப்பும் ஒரு தெய்வீக வழிகாட்டியாக திகழ்கிறது.

# பாஜகவிடம் கைகட்டி மண்டியிடும் இபிஎஸ்: செல்வப்பெருந்தகை அதிரடி

பாபர் மசூதி இடிக்கப்பட்ட டிசம்பர் 6ஆம் தேதியன்று பயங்கரவாத எதிர்ப்பு நாளாக அனுசரிக்கப்பட்டு வரும் நிலையில் சென்னை புதுபேட்டையில் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் சார்பில் மக்களின் வாழ்வுரிமை, வாக்குரிமை, வழிபாட்டுரிமை என அரசியல் சாசனம் கொடுத்த அனைத்து உரிமைகளையும் பாதுகாக்க வலியுறுத்தி மாபெரும் கோரிக்கை போராட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் சார்பில் நடைபெற்ற இப்போராட்டத்தில் சிபிஎம் மாநிலச் செயலாளர் சண்முகம், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வபெருந்தகை, திமுக எம்.எல்.ஏ பரந்தாமன் உள்ளிட்ட கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர்.

மேலும் இந்த போராட்டத்தில் சிபிஎம் மாநிலச் செயலாளர் சண்முகம் பேசுகையில், டிசம்பர் 6 அன்று மதச்சார்பின்மை கோட்பாட்டின் மீது இந்துதுவாவாதிகள் கடப்பாறையை இறக்கிய நாள் மேலும் நீதிமன்ற தீர்ப்பை மீறிதான் பாபர் மசூதியை இடித்தார்கள். தற்போது திருப்பரங்குன்றம் விவகாரத்திலும் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு மீறப்பட்டது.

ஆகவே நீதிமன்ற தீர்ப்பு விமர்சனத்துக்கு அப்பாற்பட்டது அல்ல. மேலும் பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு அரசியல் சாசனத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அரசியல் சாசனத்தின் மீது உறுதிமொழி ஏற்றுக்கொண்டு தான் பொறுப்புக்கு வருகிறார்கள். பொறுப்புக்கு வந்த பிறகு அரசியல் சாசனத்துக்கு எதிராக செயல்படுவது கண்டனத்துக்குரியது. மேலும் எஸ்.ஐ.ஆர் என்ற பெயரில் வாக்குரிமை பெற்றவர்களை நீக்கும் நடவடிக்கையில் தேர்தல் ஆணையம் ஈடுபட்டுள்ளது. பிகாரில் 65 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

எஸ்.ஐ.ஆர் மூலம் பீகாரில் பாஜகவே எதிர்பார்க்காத வெற்றியை பெற்றுள்ளனர். தமிழ்நாட்டில் பாஜகவை கண்ணை மூடிக்கொண்டு கையை கட்டிக்கொண்டு மண்டியிட்டு ஆதரிப்பது தான் இபிஎஸ்சின் ஒரே நிலைப்பாடு ஆகவே அதிமுகவும், இபிஎஸும் பாஜகவின் கட்டுப்பாட்டில் இருக்கிறார்கள் என்பது அனைவரும் அறிந்த ஒன்று எனவே சுயாட்சியாக இயங்கும் நிலையை அதிமுக கைவிட்டுவிட்டது என்றார்.



இதனைத்தொடர்ந்து காங்கிரஸ் மாநிலத் தலைவர் செல்வபெருந்தகை பேசுகையில், அமைதிப் பூங்காவாக இருக்கும் மாநிலங்களை சீர்குலைக்க வேண்டும் என்கிற அரசு நமக்கு தேவையா? அயோத்தியில் பாதகர்கள் பாபர் மசூதியை இடித்தனர். சரியாக அம்பேத்கர் நினைவு நாளில் அதை செய்தார்கள். ஆளுநர் என்பவர் தபால்காரர்தான். அரசியலமைப்பு சட்டம் மூன்றாம் தர அரசியல்வாதிகளின் கையில் சிக்கி தவிக்கிறது.

எனவேதான் ஒவ்வொரு கார்த்திகை தீபத்தன்றும் திருப்பரங்குன்றம் விவகாரத்தை கையில் எடுக்கிறார்கள். எத்தனை முருகன் கோயில்கள் உள்ளது, அங்கு எல்லாம் தீபம் ஏற்றாதவர்கள், திருப்பரங்குன்றத்தில் தான் தீபம் ஏற்ற வேண்டும் என்கின்றனர். காரணம் என்னவென்றால் இங்கு தர்கா உள்ளதால் கலவரம் ஏற்படுத்த வேண்டும் எனவ தீபம் ஏற்ற வேண்டும் என கூறுகின்றனர்.

உத்தர பிரதேசத்தில் எப்படி கலவரத்தை ஏற்படுத்தினார்களோ அதுபோலவே திருப்பரங்குன்றத்தில் ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். கையைக் கட்டி வேடிக்கை பார்க்கக்கூடிய அரசு, தமிழ்நாடு அரசு அல்ல. தமிழ்நாட்டு முதலமைச்சரை எளிமையாக தொட முடியாது, தொட்டால் ஷாக் அடிக்கும். முதலமைச்சர் ஸ்டாலின் பின்வாங்க மாட்டார். மேலும் தமிழ்நாட்டு நலனுக்காக எந்த கொம்பன் சொன்னாலும் நம்முடைய முதலமைச்சர் சமாதானப் படுத்திக் கொள்ளமாட்டார். இன்னும் மூன்று ஆண்டுகளில் மத்தியில் ஆட்சி மாற்றம் வரும், அப்போது பாஜக ஆட்சி கீழே விழும் எனக் கூறினார்.

# ஜவுளி பூங்காவில் சாயப்பட்டறை வேண்டாம்

# அரசுக்கு பொதுமக்கள் கோரிக்கை!

சேலம் மாநகராட்சிக்குட்பட்ட ஜாகீர் அம்மாபாளையம் பகுதியில், ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா அமைக்க, மேக்னசைட் நிறுவனத்திற்கு சொந்தமான 184.5 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, சுமார் ரூ.360 கோடி மதிப்பீட்டில் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த இடத்தில் யான் கலரிங் பார்க் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் 21 சாயப்பட்டறைகளை அமைக்க கட்டுமானப்பணிகளை தொடங்கியுள்ளது. சாயப்பட்டறைகள் அமைவதால், இப்பகுதியில் நிலத்தடி நீர் மற்றும் சுற்றுச்சூழல் மாசு ஏற்படும் என இப்பகுதி மக்கள் கடுமையான எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஏனெனில் இதனால் நிலத்தடி நீர், மண்வளம், சுற்றுச்சூழல் மாசுபட்டு வாழ்வதற்கு இடையூறாக இருக்கும் என்ற அச்சம் இப்பகுதி பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. பொதுமக்களின் அச்சத்தை போக்க வேண்டியது அதிகாரிகளின் கடமையாகும்.


மேலும் இத்தகைய சாயப்பட்டறைகள் இயங்க சுமார் 20 லட்சம் லிட்டர் தண்ணீர் தேவைப்படும். எங்கிருந்து தண்ணீர் வரும் என அதிகாரிகள் சொல்ல மறுக்கிறார்கள். சம்மந்தப்பட்ட இடத்தில் ஏரி, ஆறு போன்ற எந்த நீர் ஆதாரமும் இல்லாத நிலை உள்ளது. தினந்தோறும் 20 லட்சம் லிட்டர் நிலத்தடி நீரை எடுத்தால், இப்பகுதி முழுவதும் உள்ள நீர் ஆதாரம் முழுவதும் உறிஞ்சப்பட்டு மக்களின் அன்றாட தேவைக்கான நீர் ஆதாரம் பாதிப்பு ஏற்படும் எனவே மக்கள் எழுப்பும் சந்தேகங்களை அரசாங்கத்தின் சார்பாக தீர்க்க வேண்டியது அதிகாரிகளின் கடமை.

மேலும் மக்களுக்கு உள்ள எல்லா பிரச்சனைகளுக்கும் விளக்கத்தை அளித்து, மக்களின் ஒத்துழைப்போடு திட்டத்தை செயல்படுத்த வேண்டுமே தவிர, மக்கள் எதிர்ப்பை மீறி, ஒரு திட்டத்தை செயல்படுவது மாநில அரசிற்கு நல்ல பெயரை ஏற்படுத்தி தராது.

எனவே உடனடியாக இத்திட்டத்தை நிறுத்திவிட்டு, மக்கள் கேட்கும் விளக்கங்களுக்கு மாநில அரசும் மாவட்ட நிர்வாகமும் பதிலளிக்க முன்வர வேண்டும். மக்கள் ஒத்துழைப்புடன் திட்டத்தை நிறைவேற்றினால், அந்த திட்டம் வரவேற்பு பெறும்.

மேலும் தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை மாசு கட்டுப்பாட்டை முறையாக கண்காணிப்பதில்லை என்ற புகார்கள் உள்ளது. பூஜ்ஜியம் டிகிரி மாசு பூமிக்குள் செல்லாது என அரசு கூறுவது மக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை. எனவே சாயப்பட்டறைகளை தவிர்க்க என்ன செய்ய வேண்டும் என அரசு யோசிக்க வேண்டும். எனவே சாயப் பட்டறைகளை மக்களுக்கு பாதிப்பு இல்லாத வேறு இடத்தில் அமைக்கலாம். கனிமவளம் மிக்க மேக்னசைட் பகுதியில், இந்த திட்டத்தை அமைப்பது பற்றி பரிசீலிக்க வேண்டும்.

ஆகவே அரசுக்கு சொந்தமான இடமாக இருந்தாலும், மேக்னசைட் இடத்தில் மாற்றுத் திட்டத்தை செயல்படுத்து குறித்து அரசு பரிசீலனை செய்ய வேண்டும் என பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை வைக்கின்றனர்



# கைநழுவிப்போன தென்கொரிய தொழிற்சாலை




அண்டை மாநிலமான ஆந்திரா, தமிழ்நாட்டோடு அனைத்து வகையிலும் போட்டி போட்டுக்கொண்டு இருக்கிறது. கல்வி, தொழில், மருத்துவம் என எதை எடுத்துக்கொண்டாலும் தமிழ்நாட்டுக்கு சவாலாக விளங்குவது ஆந்திராதான். தகவல் தொழில்நுட்பத்துறையில் அமெரிக்காவில் வேலை பார்ப்பவர்களை எடுத்துக்கொண்டால் தமிழ்நாட்டை சேர்ந்தவர்களை விட, ஆந்திராவை சேர்ந்தவர்களே அதிகமாக இருக்கிறார்கள். தொழில் துறையிலும் இப்போது ஆந்திராவில் வேகம் தெரிகிறது. அதிலும் சந்திரபாபு நாயுடு 4-வது முறையாக முதல்-மந்திரியாக பொறுப்பேற்றதில் இருந்து தொழில் வளர்ச்சி குதிரை பாய்ச்சலில் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் தகவல் தொழில்நுட்பத்துறை மந்திரியாக அவருடைய மகன் நாரா லோகேஷ் துடிப்புடன் இருக்கிறார்.

தொழில்துறை முன்னேற்றத்தில் சந்திரபாபு நாயுடு கடந்த முறை ஆட்சியில் இருந்தபோதே நிறைய தொழிற்சாலைகளைக் கொண்டுவந்தார். இப்போது பதவியேற்றதில் இருந்தே தமிழ்நாட்டோடு கடும் போட்டியில் இருக்கிறார். அவருக்கு மிகவும் சாதகமான ஒன்று என்றால், 16 எம்.பி.க்களை வைத்துக்கொண்டு மத்திய அரசாங்கத்தில் பா.ஜனதாவுக்கு பெரும்பான்மை இல்லாததால், அச்சாணியாக இருக்கிறார். எனவே அவர் கேட்டதெல்லாம் கிடைக்கிறது. அதற்கு ஒரு சிறிய உதாரணம், கூகுள் நிறுவனம் மற்றும் அதானி நிறுவன முதலீடுகள்தான். கூகுள் நிறுவன தலைமை செயல் அதிகாரி சுந்தர் பிச்சை தமிழ்நாட்டை சேர்ந்தவர் என்றாலும் கூட, அந்த நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவு தரவு மையம் ரூ.1 லட்சத்து 32 ஆயிரத்து 855 கோடி முதலீட்டில் ஆந்திராவில் உள்ள விசாகப்பட்டினத்தில்தான் தொடங்கப்படுகிறது.

அமெரிக்காவுக்கு வெளியே செய்யப்படும் மிகப்பெரிய முதலீடு இது என்று சுந்தர் பிச்சையே சொல்லியிருக்கிறார். புதிய நிறுவனம் மட்டுமல்லாமல், ஏற்கனவே தமிழ்நாட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ள வெளிநாட்டு நிறுவனங்களையும் சந்திரபாபு நாயுடு கொத்திக்கொண்டு போய்விடுகிறார். தமிழக அரசின் சார்பில் தூத்துக்குடியில் கடந்த ஆகஸ்டு மாதத்தில் நடந்த முதலீட்டாளர்கள் மாநாட்டில் தென்கொரிய நாட்டை சேர்ந்த தோல் அல்லாத காலணிகளை உற்பத்தி செய்யும் ஹூவாசிங் காலணி நிறுவனம் தமிழ்நாட்டில் ரூ.1,720 கோடி மதிப்பீட்டில் 20 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் ஒரு தொழிற்சாலையை தொடங்கப்போவதாக புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தது. இது மிகவும் பெருமைக்குரிய நிறுவனமாக கருதப்பட்டது.

தமிழ்நாட்டில் எந்த இடத்தில் இந்த தொழிற்சாலையை தொடங்கலாம்? என்று இடம் தேர்வு செய்துகொண்டிருந்த நேரத்தில், தமிழ்நாட்டில் எங்கும் இல்லை தமிழக எல்லையையொட்டியுள்ள முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு வெற்றி பெற்ற குப்பம் தொகுதியில் இந்த தொழிற்சாலை தொடங்கப்படும் என்ற அதிர்ச்சியான தகவல் கிடைத்துள்ளது. இதற்கு காரணம் முதல் கட்டமாக 100 ஏக்கர் நிலத்தை ஆண்டுக்கு ஒரு ஏக்கர் ரூ.99 என்ற விலையில் 50 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு ஆந்திர அரசு கொடுத்துள்ளது. ஆக இந்த தென்கொரிய தொழிற்சாலை தமிழ்நாட்டை விட்டு கைநழுவி போய்விட்டது.

ஆந்திராவில் நிலம் விலை மார்க்கெட்டிலேயே மிக மிக குறைவு. ஆனால் தமிழ்நாட்டில் அவர்கள் கேட்ட இடங்களில் நிலத்தின் விலை மிகவும் அதிகம். அந்த ஒரே காரணத்துக்காகத்தான் தமிழ்நாட்டை விட்டுவிட்டு ஆந்திராவுக்கு சென்றுவிட்டார்கள். இதுமட்டுமல்லாமல் மின்சாரமும் சலுகை விலையில் வழங்கப்படும் என்று ஆந்திர அரசாங்கம் உறுதியளித்துள்ளது. எதிர்காலத்தில் இதுபோன்ற காரணங்களால் மற்ற தொழிற்சாலைகளும் சென்றுவிடாமல் தடுக்க நமது தூண்டிலில் சரியான இரையைப்போட்டு தமிழக அரசு முதலீடுகளை ஈர்க்கவேண்டும்.

# கேலோ இந்தியா போட்டியில் நிர்வாக–நிதி மோசடியா?

கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள் இந்த ஆண்டு ராஜஸ்தான் மாநிலத்தின் ஜெய்ப்பூர், அஜ்மீர், உதய்பூர், ஜோத்பூர், பிகானீர், கோட்டா, பரத்பூர் உள்ளிட்ட ஏழு நகரங்களில் நவம்பர் 24 முதல் டிசம்பர் 5 வரை நடைபெற்றன. நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழக மாணவர்கள் பங்கேற்க வேண்டிய இந்த தேசிய அளவிலான போட்டிகள், வீரர்–வீராங்கனைகள் மிகவும் குறைவான எண்ணிக்கையில் பங்கேற்றனர் ஆகவே இது கடுமையான சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் இந்த தொடரின் இரண்டு முக்கிய பிரிவுகளான – மகளிர் 400 மீட்டர் ஓட்டப்பந்தயம் மற்றும் ஆடவர் 400 மீட்டர் தடைதாண்டும் ஓட்டப்பந்தயம் – இரண்டிலும் தலா ஒருவரே பங்கேற்றது பெரிய அதிர்ச்சியாக அமைந்தது. மேலும் குஜராத் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ருச்சித் மோரி தனியாக ஓடி 51 விநாடிகளில் தங்கத்தை வென்றார். இதேபோல், குருசேத்ரா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மணிஷா 59.54 விநாடிகளில் தனியாக ஓடி தங்கம் பெற்றார். ஒரு தேசியப் போட்டியில் போட்டியாளர்கள் இல்லாமல் தங்கப்பதக்கம் வழங்கப்படுவது விளையாட்டு உலகமே கேள்விக்குள்ளாக்கும் நிலை மோடி அரசின் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மீது, விளையாட்டா ஆர்வலர்கள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது

இந்த நிலையில், பல்கலைக்கழக அணிகள் ஏன் பங்கேற்கவில்லை என்பது பெரும் விவாதத் தலைப்பாகியுள்ளது. மோடி அரசின் ஒன்றிய விளையாட்டுத் துறை அமைச்சகம் கோடிக்கணக்கான வரிப்பணத்தை ஒதுக்கி இந்த போட்டிகளை நடத்தியிருந்தாலும், வீரர்–வீராங்கனைகளின் பங்கேற்பை உறுதி செய்ய வேண்டிய முக்கிய பணிகளில் குறைபாடு நிகழ்ந்திருக்கிறதா என்ற சந்தேகம் எழுகிறது. அறிவிப்புகள் சரியாக வெளியிடப்பட்டதா? பல்கலைக்கழக நிர்வாகங்கள் அனுமதி, விடுப்பு போன்ற நடைமுறைகளை பின்பற்றத் தவறினார்களா? அல்லது போட்டியின் நிதி மேலாண்மையில் முறைகேடு நிகழ்ந்ததால் குறைந்த பங்கேற்பாளர்களுக்கு மட்டுமே அழைப்பு விடுக்கப்பட்டதா? என பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன.



அதே நேரத்தில், சில ஊடகங்கள் மைதானத்தில் தேசிய ஊக்கமருந்து எதிர்ப்பு நிறுவனம் (NADA) இருந்ததால் சபல வீரர்கள் போட்டியில் கலந்துகொள்வதில் தயக்கம் காட்டியதாக தகவல்கள் வெளியிட்டுள்ளன. மேலும் சில விளையாட்டு வல்லுநர்கள் கூறுகையில் பல்கலைக்கழகங்களில் விடுப்புகள் வழங்கப்படாதமை, மழை மற்றும் குளிர்கால சூழ்நிலை போன்ற காரணங்களையும் முன்னிறுத்துகின்றனர். இவை அனைத்தும் உண்மையான காரணமா? அல்லது பிரச்சினையை திசைதிருப்புவதற்கான விளக்கங்களா? என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

## விளையாட்டு மேலாண்மையின் குறைபாடா?

நாட்டின் விளையாட்டு துறை வழிகாட்டும் இளையோர் இவ்வாறு தேசிய அளவிலான போட்டிகளில் கூட பங்கேற்க முடியாத நிலை உருவாகியுள்ளது என்பது விளையாட்டு அமைப்புகளின் செயல்திறனைப் பற்றி சீரிய மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியத்தை காட்டுகிறது. இத்தகைய போட்டிகளில் பங்கேற்பாளர் குறைவுக்கான நிஜ காரணத்தை வெளிப்படையாக விளக்கி விசாரணை மேற்கொள்ள வேண்டியது தவிர்க்க முடியாத ஒன்றாக விளையாட்டு நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர்.

# PROPSERV
Property Related Allied & Legal services

- ★ REGISTRATION
- ★ PATTA
- ★ GIRAMA NATHAM
- ★ CMDA APPROVAL
- ★ BUILDING PLAN
- ★ NAME TRANSFER
- ★ SETTLEMENT
- ★ LEGAL HEIR CERTIFICATE
- ★ CORPORATION TAXES
- ★ LAND CEILING
- ★ SLUM BOARD
- ★ HOUSING BOARD
- ★ PROPERTY IDENTIFICATION
- ★ DEMOLITION ORDER

Office: J133A, M.M.D.A Colony, Arumbakkam, Chennai - 600106. Cell: 97896 98297
Email: advgsathiyanarayanan@gmail.com

9444010700 | 8668141500

rameshkumar7hills@gmail.com

**Er.K Ramesh kumar**
CMDA & Chennai Corporation Approved
Registered Engr / Consultant



Owned, Printed and Published by: **NV SIVASHANKAR** | Printed at: **J.M.PROCESS, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002.** | Published at: **No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078.** | Editor: **RATHIKA S**



TAMILNI
PRINTZ & GRAPHICS
ALL TYPE OF PRINTING & GRAPHICS SOLUTIONS
DTP தமிழ் / ENGLISH | PRINTOUT | LAMINATION
DESIGN: NEWSPAPER | MAGAZINE | BILL BOOKS
LETTERPAD | LOGO | FLEX / VINYL | POSTER
WEBSITE
DESIGN
SERVICE
APPLY
PAN CARD
PASSPORT
ALL
ONLINE
SERVICE
DESIGN
MAGAZINE
NEWSPAPER
NEWS
ADDRESS:
3/885, PILLAIYAR KOVIL STREET, METTUKUPPAM, OMR,
CHENNAI - 600097, EMAIL: rsprintzy@gmail.com
PH.: 044-3590 6002 MOB.: 8754582123 / 9962245338

**PENA KURAL,** Tamil Monthly - December 2025
Registered with the Registrar of Newspapers for India Under No.: **TNTAM/2022/85375**

Administrative Office:
**3/885, Pillaiyar Kovil Street, (Opp to Perumal Temple) Mettukuppam, OMR, Chennai - 600097.**
Contact No.: **044 - 35906002, 87545 82123** Email: **info@penakural.com**

